Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் யாழ்ப்பாணம் சோபகிருது வைகாசி 3 ஆம் நாள் துல்ஹஜ் 22 (17-5-63) வெள்ளிக்கிழமை இதழ் 96

# பாரத - பாக். பேச்சில் பயனில்லை?

## இருபகுதி யோசனையும் நிராகரிப்பு!

புதுடில்லி, மே 16

**காஷ்மீர் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் சம்பந்தமாக புதுடில்லியில் நேற்று ஆரம்பமான இந்திய-பாகிஸ்தான் மந்திரிகள் கட்ட பேச்சு வார்த்தை இரண்டாவது நாளான இன்றுடன் முடிவடையும் என்று பாகிஸ்தான் வட்டாரங்கள் தெரிவித்தன.**

பாகிஸ்தான் தூது கோஷ்டித் தலைவர் ஜனைப் புட்டோவும் இந்திய கோஷ்டித்தலைவர் சர்தார் சுவர்ண்சிங்கும் இன்று காலை 45 நிமிஷநேரம் சந்தித்துப் பேசினர். இன்று பிற்பகலும் அவர்கள் சந்தித்துப் பேசவிருக்கின்றனர். இன்று மாலையில் பாகிஸ்தான் கோஷ்டி கராச்சிக்குத் திரும்பிச் செல்லவிருக்கிறது.

**யோசனை நிராகரிப்பு**

நேற்று நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது காஷ்மீரில் சர்வஜனவாக்கெடுப்பு நடத்தி காஷ்மீரின் எதிர்காலம் பற்றி மக்களின் தீர்ப்பைத் தெரிந்து கொள்வதற்கு முன்னோடியாக காஷ்மீர் பள்ளத்தாக்கை குறிப்பிட்ட காலத்துக்கு சர்வதேச நிர்வாகத்தின் கீழ் விடப்பட வேண்டுமென்று பாகிஸ்தான் மந்திரி ஜனைப் புட்டோ யோசனை கூறியதாகவும் இதை இந்திய மந்திரி சர்தார் சுவர்ண்சிங் நிராகரித்துவிட்டதாகவும் பாகிஸ்தான் ரேடியோ தெரிவித்தது.

இந்தியாவும் பாகிஸ்தானும் போர் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டுமென்ற யோசனையை சர்தார் சுவர்ண்சிங் மீண்டும் தெரிவித்ததாகவும் இதைப் பாகிஸ்தான் கோஷ்டித் தலைவர் நிராகரித்ததாகவும் பாகிஸ்தான் ரேடியோ கூறியது.

புதுடில்லிப் பேச்சிலும் அபிவிருத்தி ஏற்படவில்லையென்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கடத்தப்பட்ட பெண் பெற்றோருடன் சென்றார்

## எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

கந்தர் மடம் பெண் கடத்து வழக்கில் எதிரியாகிய கார்சாரதி எஸ். பேரம்பலம் குற்றவாளியல்லவென்று, நேற்று காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோட்டில் நீதிபதி அரசுவால்டன் விசாரணையின் பின் தீர்ப்பளித்தார்.

ஜெயகௌரி நடராசா என்பவரை கடத்திச் சென்றதசக கார்சாரதி எஸ். பேரம்பலம் மீது குற்றம் சாட்டி யாழ்ப் பொலிஸார் வழக்கு தொடர்ந்தனர்.

பிறப்பு சாட்சிப் பத்திரம் மூலம் பெண்ணின் வயதை இன்ஸ்பெக்டர் அத்தாட்சிப் படுத்தியபின்பு நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

நீதிபதி தீர்ப்பளித்தபின் ஜெயகௌரியை, விரும்பியவர்களுடன் போகலாம் என்று தெரிவித்ததைத் தொடர்ந்து பெண்பெற்றோரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

மாஜிஸ்டிரேட் கோட்டைசுற்றிவரப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. கோட்டு வளவிற்குள்ளே நியாயவாதிகளின் கார்களை தவிர மற்றும் கார்கள் அனுமதிக்கப்படவில்லை

விசாரணையின் போது பொதுமக்கள் கோட்டிற்குள்

## தமிழரசு செயற்குழு இன்று மன்னாரில் கூடுகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழரசுக்கட்சியின் செயற்குழு இன்று மன்னாரில் கூடுகிறது. இச் செயற்குழு நாளையும் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. செயற்குழுக் கூட்டம் மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன் வீட்டில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்திற் கலந்து கொள்ளுமுகமாக தமிழரசுக் கட்சி பிரமுகர்களும், எம். பி.க்களும் மன்னார் சென்றுள்ளனர். இச் செயற்குழு அவசரகாலநிலை நீக்கப்பட்டபின் முதலாவது தடவையாக இன்று தான் கூடுகிறது.

## யாழ்ப்பாணத்தில் புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி

பஸ் பிரயாணிகளின் வசதிகளை முன்னிட்டு யாழ்ப்பாணம் இ. போ. ச. டிப்போ இம்மாதம் முதல் முதியிலிருந்து ஒரு புதிய சேவையை ஆரம்பித்துள்ளது. இப் புதிய சேவை யாழ்ப்பாணம் கச்சேரிக்கும், மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குமிடையேயானது. ஆனைக்கோட்டை வழியாக நான்கு பஸகளும், தாவடி வழியாக நான்கு பஸகளும் இப் புதிய சேவையில் ஈடுபட்டுள்ளன. இப்புதிய சேவைகளைப் பொது மக்கள் வரவேற்றுள்ளனர்.

இறைச்சி சாப்பிட்டு, பழரசம் அருந்தி, படுத்துறங்கி ....

# உலகினை வலம்வரும் விண்வெளிவீரர் கூப்பர்

கேப்கனவரோல், மே 15

அமெரிக்க விண்வெளி வீரர் மேஜர் கார்டன்கூப்பர், இன்று காலை வான்வெளிக் கப்பலில் காலை உணவை சாப்பிட்டு, பழரசமருந்தி, நிம்மதியாகப் படுத்துறங்குகிறார். அவரின் நித்திரையின் போது கூப்பரை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாமென்றும் அவருடன் தொடர்பு கொள்ளவேண்டாமென்றும வான்வெளி ஆராய்ச்சி நிலையங்கள் கேட்டுள்ளன.

விண்வெளிப் பயணத்தை மேற்கொண்ட இருபது மணித்தியாலங்களுக்குள் பன்னிரண்டு தடவைகள் உலகினை வலம் வந்த அமெரிகக விண்வெளி வீரர் மேஜர் கார்டன் கூப்பர் இன்றுகாலைப் போசனமருந்தினர். இதன் பின்னர் அவர் பதம்படுத்தப்பட்ட கோழிக் குஞ்சு சாப்பாடு, மற்றும் இறைச்சிவகையும், கேக், முதலிய உணவுகளும் சாப்பிட்டார். அவருக்கு பசி சிறிது அதிகமாகவிருந்ததாகக் கூறப்படுகிறது.

வெற்றிகரமாக உலகினை பன்னிரண்டு தடவைகள் வலம் வந்த பின்னர், அதாவது இலங்கை நேரப்படி சுமார் ஒரு மணியளவில்: அவர் முந்திரி தோடம்பழ ரசம் அருந்தினர். இதனைத் தொடர்ந்து ஓய்வெடுக்கும் பொருட்டு அவர் திட்டப்படியான எட்டு மணிநேர நித்திரையை மேற்கொண்டார், கூப்பர் நித்திரை செய்து கொண்டிருக்கும் பொழுது அவரைத் தொந்த

(5-ம் பக்கம் பார்க்க)

# கோயில் ஐயர் கொலைவழக்கு சுப்ரீம்கோர்ட்டுக்கு பாரம்

## நேற்றைய விசாரணையிலும் கோகிலாம்பாள் குறுக்கு விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த மூன்று மாதங்களாக சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்பட்டுவந்த, பெரும் பரபரப்பை ஏற்படுத்திய உருத்திரபுரம் கோவில் ஐயர் கொலைவழக்கு நேற்று நடைபெற்ற விசாரணையின் முடிவில் சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டது: மூன்று எதிரிகளையும் சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு நிற்குமாறு கூறிய மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் அதுவரை மூவரையும் விளக்கமறியலில் இருக்க உத்தரவிட்டார். சுப்ரீம் கோர்ட்டில் ஆங்கிலம் பேசும் ஜூரிகள் முன்னிலையில் இவ் வழக்கு விசாரணை செய்யப்படும்.

ஆரம்ப விசாரணைகளின் போது கோகிலாம்பாளைப் பார்ப்பதற்காக, ஏராளமான ஜனங்கள் கோட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் திரண்டிருந்தபோதும், நேற்றைய விசாரணையில் மக்கள் அதிகம் காணப்படவில்லை.

அனுமதிக்கப்படவில்லை, இவ் வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்கு ஏராளமான மக்கள் கோட்டின் வெளியே திரண்டிருந்தனர்.

பச்சைக் கோடிடப்பட்ட வெள்ளை 'வொயில்' சாறியும், அதற்கேற்ற வெள்ளைப் புள்ளியிட்ட பச்சைச் சட்டையும் கோகிலாம்பாள் அணிந்திருந்தார். கோர்ட்டிற்கு வந்ததுமுதல் அவர் மிகவும் அமைதியாகக் காணப்பட்டார். முகத்தில் எதுவித மாறுதலும் காணப்படவில்லை.

முதலாம் எதிரியாகிய முத்தர் வேறுப்பிள்ளை அமெரிக்கன் ரெடிமேட் 'யங்கி' சேட் அணிந்திருந்தார். இரண்டாவது எதிரியாகிய ஆர். பசுபதி சாதாரண 'ரெடிமேட்' சேட் அணிந்து நெற்றியில் பளிச்சென்று தெரியத்தக்கவகையில், சந்தனப்பொட்டு இட்டிருந்தார்.

காலஞ்சென்ற காசிலிங்க சர்மாவின் தந்தையாகிய குப்புசாமி ஐயரோ, பிள்ளைகளோ, மைத்துனரான நாராரண சர்மாவோ, சகோதரரோ நேற்று கோர்ட்டிற்கு வரவில்லை.

(5-ம் பக்கம் பார்க்க

## கேள்விப்பத்திரம்

யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர் சங்கத்தின் தேநீர்ச் சாலையை (Canteen) நடாத்துவதற்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து 30-5-1963-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்களுக்கும் இதர விபரங்களுக்கும் கீழ்க் காணும் விலாசத்துக்கு நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்பு வைக்கவும்.

சி. பொன்னுத்துரை
கௌரவ காரியதரிசி

யாழ்ப்பாண மாநகரசபை
ஊழியர் பொதுநலச் சங்கம்,
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15–5–63 1007

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பத்து ஏக்கர் நெற்காணி கமரிகுடா, பரந்தன். நீர்ப் பாய்ச்சல் வசதியுடன் மற்றும் விபரங்களுக்கு, க. சதாசிவம், 41, செப்பல் வீதி, யாழ்ப்பாணம் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். 994

### விற்பனைக்கு

ஒரு ஸ்ரீ தொடர்பு இலக்கமுடைய றினோல்ட் டோர்பின் கார் விற்பனைக்குண்டு. விலை ரூபா 8000 அல்லது பெறுமதியான விலை.

C/o அரியகுட்டி, 5–ம் கட்டை கோப்பாய்-மானிப்பாய் வீதி. 996

### தேவை

எமது தொழிற் சாலையில் கடமையாற்ற ஆண்களும் பெண்களும் தேவை. விஜயகம் இன்டஸ்ரீஸ், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 997

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநாதர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## 250 தலைமை ஆசிரியர்கள்

### நிரந்தரமாக்க அமைச்சு முடிவு

கண்டி, புதன்

இப்பொழுது தற்காலிகபாடசாலைத் தலைமை ஆசிரியர்களாகப் பதவி வகிக்கும் ஆசிரியர்களில் 25 சதவிகிதத்தினரை அவர்களது பதவியில் நிரந்தரமாக்குவதென்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாடு முழுவதிலும் இப்பொழுது ஆயிரம் தற்காலிக தலைமை ஆசிரியர் உள்ளனர். இவர்களில் 250 பேருக்கு நிரந்தர பதவியளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதே சமயம் மிகக் குறைந்த தொகையினருக்கு மட்டும் நிரந்தர சேவை வழங்கப்படுவதற்கு தலைமையாசிரியர் சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## இன்று

அகில இலங்கை பொதுஜன சேவைச் சங்கத்தின் ஆதரவில் நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் இன்றிரவு 'சமய வாழ்வு' என்பது பற்றி திருமதி நாகபூஷணி சாம்பசிவம் உரை நிகழ்த்துவார்.

# ஞானசீகதேரோ ரஷ்யா செல்வார்

கொழும்பு, வியாழன்

ஹென்பிட்டகெதர ஞானசீக தேரோ விரைவில் ரஷ்யா செல்லவிருக்கிறார்.

ரஷ்யாவுக்குச் செல்வதற்கு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டபிக்குகளின் பெயர்களில் ஞானசீக தேரோவின் பெயரும் இடம்பெற்றுள்ளதால் அவரும் விரைவில் ரஷ்யா செல்வார்.

ஞானசீகதேரோ உட்பட ஐந்து பிக்குகள் ரஷ்யாவில் 20 நாள் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்ளுவார்கள். ரஷ்ய பௌத்த சபையின் அழைப்பின்பேரில் செல்லவிருக்கும் இவர்களது சகல செலவுகளையும் சபை ஏற்றுக்கொள்ளும்.

ஞானசீக தேரோவுடன் வண. ஹெலியல சுமணதிஸ தேரோ, வண. கொள்கொடதம்மவன்ச தேரோ, வித்யோதய பல்கலைக்கழக உப வேந்தர் வண. சொரதநாயக தேரோ வித்யாலங்கார பிரிவெனாவைச் சேர்ந்த வண. யக்கடுவா பிரேக்னராமநாயக்க தேரோ ஆகியோர் செல்லவிருக்கின்றனர்.

இவர்களுடன் உள்விவகார அமைச்சின் உதவிக் காரியதரிசி திரு. டபிள்யு. எம். ஆர். பி ராஜகருணவும் செல்வாரெனனத் தெரிகிறது.

## பதுளை மாநகரசபையின் தேர்தல்

பதுளை, வியாழன்

பதுளை மாநகரசபையின் முவலாவது பொதுத் தேர்தல் ஜூன் மாதம் 4-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

இப்போதைய பதுளை நகரசபையின் சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. மார்டின் சில்வா தேர்தலில் போட்டியிடவில்லை.

மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 14 அபேட்சகர்களும், சுதந்திரக் கட்சியின் சார்பில் 13 அபேட்சகர்களும், லங்கா சமாஜக் கட்சியின் சார்பில் 10 பேட்சகர்களும், ராஜரத்தினவின் ஜாதிக விமுக்தி பெரமுனையின் சார்பில் 11 அபேட்சகர்களும் போட்டியிடுகின்றனர். சுயேச்சை அபேட்சகர் மூவரும், ஒரு கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகரும், ஒரு சுயேச்சை சோஷலிஸ்ட் அபேட்சகரும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

## சர்வாதிகாரத்தை ஆதரிக்கவில்லை

### உதவி மந்திரி கூறுகிறார்

இரத்தினபுரி, வியாழன்

"சர்வாதிகாரத்தை நாங்கள் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. ஆனால் ஞானசீகர தேரோ சர்வாதிகாரம்பற்றி வெளியிட்ட யோசனையைச் சிலர் பெரிதுபடுத்திப் பேசுவது தான் ஏன் என்று விளங்கவில்லை" என்று உதவிக் கல்வி மந்திரி திரு. வி. டி. ஜி கருணாரத்ன கல்லோயா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

திரு. கருணாரத்ன மேலும் பேசுகையில், முன்னர் சில மந்திரிகள்கூட சர்வாதிகாரம் பற்றிப் பேசியிருக்கிறார்கள் என்றும் அப்பொழுது யாரும் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை என்றும் ஞானசீகர தேரோ தமது சொந்தக் கருத்தை வெளியிட்டாரென்றும் அதைப்பற்றிப் பெரிதாகக் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லையென்றும் கூறினார்.

## சனசமூக நிலையங்களின் சமாஜ விழா

பருத்தித்துறை, வியாழன்

வடமராட்சிப் பகுதிச் சனசமூக நிலையங்களின் சமாஜ விழா புலோலி கிராமசபையின் தலைவர் திரு. செ. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

புலோலி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவின் காலை நேர நிகழ்ச்சிகளில் பாட்டு பேச்சு கட்டுரைப்போட்டிகள் இடம் பெற்றன.

மாலையில், நடனம், நாடகம் முதலானவையுடன் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்ட முடிவில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் திறமை காண்பித்த நிலையங்கட்கு தலைவர் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார்.

முற்பகல் நிகழ்ச்சிகளின் போது பிரதம விருந்தினராக உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் கலந்துகொண்டதுடன் நிலையங்களின் கலை ஆர்வத்தைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

## திரு. கிரிதாரி பிரசாத் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர் மண்டபத்தில் கோயம்புத்தூர் கௌரவ நீதிபதி திரு. கிரிதாரி பிரசாத் நாளைக் காலை 10 மணிக்கு 'அப்பரின் அருள் வாழ்வு' என்பதுபற்றி சொற்பொழிவாற்றுவார்.

## ஆகஸ்ட் 1-ல் வரவு செலவுத் திட்டம்

கொழும்பு, வியாழன்

1963 - 64-ம் வருடத்துக்கான வரவுசெலவுத் திட்டம் வரும் ஆகஸ்ட் முதலாம்திகதியன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படுமென்ன அறியப்படுகிறது.

வரவு-செலவுத் திட்ட உரை முதலாவது முறையாக சிங்களத்தில் நிகழ்த்தப்படுமென நம்பப்படுகிறது.

பார்லிமெண்டின் அடுத்த கூட்டத் தொடர் ஜுலை 17-ல் கூடும்போது சிம்மாஜனப் பிரசங்கம் நிகழ்த்தப்படும்.

## கிராமசேவகருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற ஐந்து ஆண்டுகளாக நவாலிக் கிராம விதானையாகக் கடமையாற்றிப் பண்டத்தரிப்புக்கு கிராம சேவையாளராக நியமனம் பெற்றுச் சென்ற திரு. வை. செல்வநாயகத்திற்கு பிரிவுபசாரமும், நவாலிக கிராம சேவையாளராக நியமனம் பெற்றிருக்கும் திரு. க. செல்வராசாவுக்கு வரவேற்பும் நடைபெற்றது.

நவாலி தெற்கு சனசமூக நிலையம், நவாலி முருகானந்தா சனசமூக நிலையம் என்பனவற்றின் ஆதரவில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்திற்கு திரு. ஜே. எஸ். சின்னப்பா தலைமை வகித்தார்.

## இசை நடன கல்லூரி

கொழும்பு, வியாழன்

கொழும்பில் இசை நடனக் கல்லூரி ஒன்று அங்குரார்ப்பணம்செய்துவைக்கப் பட்டுள்ளது. இக்கல்லூரிக்கு கலை அரங்கம் என்று பெயரிடப்பட்டுள்ளது. இக்கல்லூரியைப் பரிபாலிப்பதற்கு ஒரு நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது. நிர்வாக சபை உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். செல்லத்துரை, செயலாளர்: டாக்டர் அ. கணேசாள், பொருளாளர் திரு. எஸ். வீரகத்திப்பிள்ளை, பொறுப்பாளர் திரு. வி. எஸ். இரத்தினம், திருமதி அம்மணியம்மாள் காளிமுத்து, திரு. அ. விஸ்வநாதன், செல்வி கௌரிஸ்வரி, கனகரத்தினம் ஆகிய மூவரைக் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## புளியங்கூடல் விநாயகர் ஆலய உற்சவம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

புளியங்கூடல் முத்து விநாயகர் ஆலய மகோற்சவம் சென்ற செவ்வாய்க்கிழமை கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. தினமும் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன. கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்றுவருகிறது. புளியங்கூடல் சைவமகா சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.




நான் அணிவது
இலஸ்ட்டோ காலணிகள்

மலர் இதழ் போன்ற பஞ்சு மெத்தை சொகுசுள்ள
இலஸ்ட்டோ காலணிகள் பாவிப்பதால்
நோகும் காய்ப்புகளிலிருந்தும், வெட்டுகளிலிருந்தும்
விடுதலை பெறுவீர்கள். பாத சௌகரியத்திற்கு,
இலஸ்ட்டோ காலணிகள். நீடிய கால பாவனைக்கு
உத்தரவாதம் பெற்றவை.




இலஸ்டோ போம்ட்ரெட்ஸ்

# "போர்த் தவிர்ப்பு யோசனைக்கு பாகிஸ்தான் சாதகமில்லை"

—சர்தார் சுவர்ண்சிங்

## பாக். கோஷ்டி தலைவர் புட்டோ பாகிஸ்தானுக்கு அவசர புறப்பாடு!

### காஷ்மீர் பேச்சுக்களில் மத்தியஸ்த யோசனை இடம் பெறவில்லை

புதுடில்லி, மே 19

பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தமொன்றை உருவாக்கலாம் என்ற யோசனைக்கு பாகிஸ்தானின் வெளி விவகார மந்திரியும் பாகிஸ்தான் கோஷ்டியின் தலைவருமான திரு. புட்டோ வெளியிட்ட கருத்து, போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குச் சாதகமாக வில்லையென்று காஷ்மீர் பேச்சுகளுக்கான பாரத கோஷ்டியின் தலைவரான இந்திய ரயில்வே மந்திரி சர்தார் சுவர்ண்சிங் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் வெளி விவகார மந்திரி திரு. புட்டோ, அவசர வேலை காரணமாக பாகிஸ்தான் திரும்பியுள்ளார்.

காஷ்மீர் மற்றும் அதுசம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்தும் பாரத அதிகாரிகளுக்கும் பாகிஸ்தான் அதிகாரிகளுக்குமிடையே மந்திரிகள் கட்டத்தில் நேற்று இருதடவைகள் பேச்சுக்கள் நடைபெற்றன. நேற்றுக் காலையில் இருதரப்பினருக்குமிடையே ஒரு மணி நேரம்வரை நடைபெற்ற பேச்சுக்களில் இரண்டு இரண்டு ஆலோசகர்கள் கலந்துகொண்டனர். இதன் பின்னர் திரு. சர்தார் சுவர்ண்சிங்கும் திரு. புட்டோவும் தனிமையாகச் சந்தித்து 15 நிமிட நேரம்வரை பேச்சுக்கள் நடத்தினர்.

நேற்று மாலையிலும் இருதரப்பினருக்குமிடையே பேச்சுக்கள் நடைபெற்றன. இந்தப் பேச்சுக்களின்போது, பாகிஸ்தான் கோஷ்டியின் தலைவரும் பாக். வெளிவிவகார மந்திரியுமான திரு. புட்டோ தெரிவிக்கையில், தமது நாட்டில் அவசர வேலையொன்றைக் கவனிக்கும்பொருட்டு தாம் பாகிஸ்தான் செல்ல விருப்பதாகக் கூறினர். இதனைத் தொடர்ந்து அவர் பாகிஸ்தானுக்குத் திரும்பி விட்டதாக அறிவிக்கப்பட்டது.

காஷ்மீர் மற்றும் அதுசம்பந்தமான இதர பிரச்னைகளுக்கும் தீர்வு காணு முன்னர், பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர்த் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்கான யோசனையை பாரத-பாகிஸ்தான் பேச்சுக்களின்போது பாரத கோஷ்டியினர் வலியுறுத்தினர். ஆனல் பாகிஸ்தானின் கருத்து சாதகமாக வில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

### சுவர்ண்சிங் கருத்து

நேற்று பாரத-பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையே இரண்டு தடவைகள் பேச்சுக்கள் நடைபெற்ற பின்னர், பாரத கோஷ்டியின் தலைவர் சர்தார் சுவர்ண்சிங் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது அவர் தெரிவிக்கையில், பாகிஸ்தான் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின்போது இரண்டு நாடுகளுக்குமிடையேயான போர்த் தளங்கள் ஒப்பந்தம் பற்றி தாங்கள் மீண்டும் வலியுறுத்தியதாகவும் ஆனல் இது குறித்து பாகிஸ்தான் வெளியிட்ட கருத்து போர்தவிர்ப்பு ஒப்பந்தத்துக்குச் சாதகமாக வில்லையென்றும் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:- 'காஷ்மீர் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காண்பதையே பாரதம் விரும்புகிறது. இந்த அடிப்படையில்தான் நாங்கள் பேச்சுக்கள் நடத்தினேம், இருதரப்பினருக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களின்போது அரசியல் தீர்வுகாண்பதுபற்றி ஆராயப்பட்டது. பொதுவாக சுமுகமான சூழ்நிலையில்தான் பேச்சுக்கள் நடைபெற்றன.

### மத்தியஸ்த யோசனை

நேற்று நடைபெற்ற பேச்சுக்களின்போது காஷ்மீர் பிரச்னையை மத்தியஸ்தம் மூலம் தீர்வுகாண்பது சம்பந்தமாக யோசனைகள் எதுவும் இடம் பெறவில்லையெனத் தெரியவருகிறது.

# பிரயாணிகள் படகுமீது இலங்கை பொலிஸார் சுட்டனராம்

## இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் சம்பவம்

இராமேஸ்வரம், மே 16

இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் இலங்கைப் பொலிஸார் அத்துமீறி நுழைந்து பிரயாணிகள் படகைத் துப்பாக்கியால் சுட்டு இழுத்துச் சென்றதாக ஒரு செய்தி கூறுகிறது.

இதுசம்பந்தமாகக் கூறப்படுவதாவது: "இராமேஸ்வரம் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. எம். எம். ஏ. அகமதுஜலாவுதீன் என்பவ

(6-ம் பக்கம் பார்க்க)

# 'மனித உரிமையை பாதுகாக்க பொலிஸார் பங்கு'

கான்பரா, மே 16

'மனித உரிமையைப் பாதுகாப்பதில் பொலிஸாரின்பங்கு' என்னும் விஷயம் கான்பராவில் நடைபெறும். ஐ. நா. மகாநாட்டில் ஆராயப்பட்டபோது இலங்கைப் பிரதிநிதியான உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன கீழ்க்காணும் சூழ்நிலைகள் அபாயகரமான விளைவுகளை ஏபற்டுத்தும் எனத் தெரிவித்தார்.

1. பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் சட்டதிட்டங்களுக்கு அப்பால் சென்று மனித உரிமையைப் புறக்கணித்தல்.

2. பொலிஸாருக்குரிய விதிகளை இரகசியமாக வைத்திருத்தல்.

3. சாத்தியப் படாததும் கூடாததுமான சட்டங்களை அமுல் நடத்துவது.

4. கைத்தொழிற் சட்டங்களை அமுல் நடத்த பொலிஸாரை பயன் படுத்துதல்.

# விண்ணினை கிழித்துக்கொண்டு வான்வெளிகப்பல் புறப்பட்டது

## அமெரிக்க வீரர் மேஜர் கூப்பரின் விண்வெளிப் பயணம்

கேப்கனவரோல், மே 16

அமெரிக்க வானவெளிவீரர் மேஜர் கார்டன் கூப்பரின் வான்வெளிக்கப்பல், நேற்று மாலை இலங்கை நேரப்படி ஆறுமணி முப்பத்திநாலு நிமிட நேரத்தில் மேக மண்டலத்தைக் கிழித்துக் கொண்டு தனது வெற்றிகரமான உலகவலத்தை ஆரம்பித்தது. கேப்கனவரோலிலிருந்து இன்றுகாலை கடைசியாகக் கிடைத்த தகவலின்படி, மேஜர் கார்டன் கூப்பர் இதுவரை 12 தடவைகள் உலகை வலம்வந்துவிட்டார் என்றும் அவர் சுகமே மகிழ்ச்சியாக இருக்கிருர்எனவும் தெரியவருகிறது. தமது வெற்றிகரமான வானவெளிப் பிரயாணத்தை மேஜர் கூப்பர் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிருர். வான்வெளிப் பிரயாணம் ஆரம்பித்த 20 மணித்தியாலங்களுக்குள் கூப்பர் உலகை 12 தடவைகள் வலம்வந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பதினலாம் திகதி வான்வெளிப் பயணத்தை ஆரம்பிக்கவிருந்த மேஜர் கூப்பர் ராடர் உபகரணங்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நேற்று புதன்கிழமை விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டார். மேஜர் கார்டன் கூப்பர் பிரயாணம் செய்யும் விண்வெளிக்கப்பல் தனது 12-வது உலகவலத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டதாக இன்று காலையில் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

நேற்று தனது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்த மேஜர் கூப்பர் இலங்கை நேரப்படி இரவு 9-36 மணியளவில் தமது இரண்டாவது உலகவலத்தை முடித்து மூன்ருவது தடவையாக உலகை வலம் செய்து கொண்டிருந்தார். இவர் பிரயாணம் செய்யும் விண்வெளிக்கப்பல், 88.7 நிமிட நேரத்தில் உலகை ஒரு முறை வலம் வருவதுடன் மணிக்கு 17,576 மைல் தூரத்தைக் கடந்து முடிக்கும். "பெயித் 7" என்ற இந்த விண்வெளிக்கப்பல் பூமியிலிருந்து 100 முதல் 164 மைல் உயரத்தில் பறந்து சென்று கொண்டிருந்தது. 9½ அடி உயரமான வான்வெளிக்கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் மேஜர் கூப்பருடன், அத்திலாந்திக், பசுபிக் கடலில் நிற்கும் 4 கப்பல்களும், 19 விண்வெளிப்பதிவு நிலையங்களும் தொடர்பு கொண்டுள்ளன. பிரயாணம் ஆரம்பித்த முதல் பதின்மூன்று மணித்தியாலயங்களுக்குள் மேஜர் கூப்பர் எட்டுத்தடவைகள் உலகை வலம் வந்தார்.

### மாஸ்கோ வானெலி வாழ்த்து

மேஜர் கூப்பர் வான்வெளிக்குஅனுப்பப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டதும் மேஜர் கூப்பருக்கு மாஸ்கோவானெலி வாழ்த்துச்செய்திகள் கூறியது. மேஜர் கூப்பரின் விண்வெளிப் பிரயாணம் வெற்றிகரமாக முடிவடைய வேண்டுமென்றும் வான்வெளிவெளி முயற்சிகளில் அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒத்துழைத்து முன்னேற வேண்டும் என்றும் மாஸ்கோ வானெலி வாழ்த்துக்கள் கூறியது.

மேஜர் கூப்பர், வான்வெளிக்கு அனுப்பப்பட்டதை, டெலிவிஷன் ஒலிபரப்பியது. அமெரிக்க, ரஷ்ய மற்றும் நாடுகளிலுள்ள மக்கள் டெலிவிஷனுக்கு அருகில் இருந்து மேஜர் கூப்பரின் வானவெளிப் பயணத்தைக் கண்டுகளித்தனர். மேஜர் கூப்பரின் மனைவி டிரடி ஆனந்தக் கண்ணீர் பொழிந்தார். அவர் டெலிவிஷனுக்கு அருகில் இருந்து நிகழ்ச்சிகளை அவதானித்துக் கொண்டிருக்கின்ருர்.

### தந்தையின் மடியிலிருந்து விமானம் செலுத்தினர்

இப்பொழுது வெற்றிகரமாக வானில் பறந்துகொண்டிருக்கும் மேஜர் கூப்பர் தனது ஆருவது வயதில் தந்தையின் மடியிலிருந்தவாறே விமானத்தைச் செலுத்தினர்.

(7-ம் பக்கம் பார்க்க)

# மத்தியஸ்த யோசனையை பாரதம் ஏற்றுக்கொண்டது

## "ஜனதிபதி அயூப்கானை சந்திக்க தயாராக இருக்கிறேன்"

—நேரு

புதுடில்லி, மே 16

பாகிஸ்தானுக்கும் பாரதத்துக்குமிடையே நீண்டகாலமாக நிலவிவரும் காஷ்மீர் பிரச்னையை, ஒரு மத்தியஸ்தம் வகிப்பதன் மூலம் தீர்த்து வைப்பதென்ற யோசனையை பாரதம் ஏற்றுக்கொண்டிருப்பதாக பாரதம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

புதுடில்லியில் நேற்று பாரதப் பிரதமர் இது சம்பந்தமாகத் தெரிவிக்கையில், காஷ்மீர் பிரச்னையை மத்தியஸ்தத்துக்கு விடுவதென்ற யோசனையைப் பாரதம் ஏற்றுக் கொண்டிருக்கிறதென்றும், காஷ்மீர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க உதவும் எந்த முயற்சியையும் மேற்கொள்ள பாரதம் விருப்பம் கொண்டிருக்

(7-ம்பக்கம் பார்க்க)

# பங்கர் மத்தியஸ்தத்துக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு?

புதுடில்லி, மே 16

காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தராக திரு. எல்ஸ் வேர்த் பங்கரை நியமிக்க பாகிஸ்தானுக்கு விருப்பமில்லையெனத் தெரியவருகிறது.

பாரதத்தில் அமெரிக்கத் தூதராக திரு. பங்கர் கடமையாற்றியதால், காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு மத்தியஸ்தராக அவரை ஏற்படுத்த பாகிஸதான் அரசாங்கம் விரும்பவில்லையெனத் தெரியவருகிறது.

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் காஷ்மீர் தீர்வுக்கு இந்தக் கட்டத்தில் மத்தியஸ்தரை நியமிப்பது பொருத்தமற்றது என்று டாக்காவில் கூறியிருப்பது, பாகிஸ்தானின் கருத்து என்னவென்பதை நன்ருகக் காட்டுகிறது. ஆனல் புதுடில்லியில் நேற்று ஆரம்பமான பாரத—பாகிஸ்தான் ஆருவது சுற்றுப் பேச்சுக்கள், மத்தியஸ்த யோசனையை ஆதரிக்குமெனத் தெரியவருகிறது.

டாக்காவில் பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் கூறியதிலிருந்து, தற்பொழுதுபுதுடில்லியில் ஆரம்பமான காஷ்மீர் பேச்சுக்களில் நல்ல திருப்பங்கள் ஏற்பட்டால் மத்தியஸ்த யோசனைபற்றி ஆராயலாம் என்ற கருத்தை அவர் கொண்டிருக்கலாமெனத் தெரியவருகிறது.

மூன்ருவது தரப்பினரை பேச்சுவார்த்தைகளில் இடம்பெறச் செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி புதுடில்லியில் ஆரம்பமாகியுள்ள ஆருவது பேச்சுக்களைத் தொடர்ந்து அக்கறை காட்டப்படலாமென அவதானிகள் கருதுகின்றனர். பிரிட்டன் தெரிவித்திருந்த மத்தியஸ்த யோசனையை அமெரிக்காவும்ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்தச்சமயத்தில்மேற்கத்திய நாடுகள் தெரிவித்த யோசனையை பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் முற்றிலும் எதிர்ப்பதாகத் தெரியவில்லை.

காஷ்மீர் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்த புதுடில்லி வந்திருக்கும் பாகிஸ்தான் கோஷ்டி, டில்லிக்கு வருமுன்னரே மத்தியஸ்த யோசனை பற்றி முடிவுசெய்திருக்கவேண்டும் என்று ஒரு செய்தி கூறுகிறது.

**மணி வாக்கு**

பிரார்த்தனையிலே உள்ளம் கலவாத சொற்கள் இருப்பதைவிட, சொற்கள் இல்லாத உள்ளம் கலந்திருப்பது மேலாகும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு வைகாசி மீ 3ட (17-5-63)


## மாணவர்களுக்குச் செய்யும் பாவம்

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கலைப்பகுதி மாணவர்களுக்கு உள்ள இடத்துக்குத் தக்கபடியே புகுமுகப் பரீட்சை முடிவுகள் மட்டுப்படுத்தப்பட்டனவாம். இது குல்லாய்க்குத் தகுந்தபடி தலையைச் சீவுவது போலாகும். பரீட்சையில் அதிகம் பேர் உண்மையில் சித்திபெற்றனரென்றாலும், இடமின்மை காரணமாக குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மாணவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சர்வகலாசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது மாணவர்களுக்குச் செய்யும் பெரும் பாவமாகும். இத்துடன் கல்விக்காகச் செய்யப்பட்டுள்ள இவ்வளவு ஏற்பாட்டையும் வீணாகவும் கேலிக்கூத்தாகுவதாகவுமுள்ளது.

சென்ற ஆண்டிலே வெளி மாணவர்கள் அங்கு சேர்க்கப்பட்டனர். அம்மாணவர்களுக்கு வசதியீனங்கள் அதிகமிருந்ததெனினும், படிப்பிலுள்ள ஆர்வத்தில் அவர்கள் அதைப் பொருட்படுத்தாது அங்கு சேர்ந்து பயின்று வருகின்றனர். அதேபோன்று பரீட்சையில் சித்திபெற்ற மாணவ மாணவிகளை எல்லாம் இம்முறையும் சர்வகலாசாலையில் சேர்த்துக் கொள்ள தக்க ஒழுங்குகள் செய்ய வேண்டியது அரசாங்கம், சர்வகலாசாலை இவற்றின் பொறுப்பும் கடமையுமாகும். புதிய சர்வகலாசாலைகளை ஆரம்பிப்பதாயின் இக்குறை வெகுவாக நீங்கும். அரசாங்கம் இது பற்றி உறுதிகூறியும் இன்னும் அதை நிறைவேற்றி வைக்காமல், ஒருபாவமுமறியாத மாணவ மாணவிகளைத் தண்டித்து வருவது தகாது.

நேற்று இதேவிஷயமாக இப்பத்தியில் எழுதியதில் தமிழ் மாணவமாணவிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தோம். வகுப்புவாதப் பேய் புனிதமான கல்வித்துறையிலும் புகுந்துவிட்டது உண்மையாயின் இலங்கையின் எதிர்காலம்பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதாக இருக்கும். அடிப்படை மனித உரிமைகளை இந்த வகுப்புவாத வேற்றுமைகள் மறுப்பதாகும். கலைப்பகுதிக் கல்வியால் பயனில்லை என்றும் வேலையில்லாக் கஷ்டமே இதனால் படித்தவரிடையே அதிகரிப்பதாயும் மகாத்மாகாந்தி கருத்துத் தெரிவித்துள்ளார். விஞ்ஞானக் கல்வி கற்கத்தான் புத்திசாலிகளான மாணவர்கள் அதிகம் போட்டியிடுவதாகவும்

# ஆஸ்திரேலியாவில் வைன் தயாரிப்பு

## 51 நாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதியாகிறது

**ஆஸ்திரேலியாவில் இன்று வைன் தயாரிப்பு பிரதான கைத்தொழில்களில் ஒன்றாகக் கணிக்கப்படுகிறது. வருடமொன்றுக்கு 3 கோடியே 50 லட்சம் கலன் வைன் இங்கு தயாரிக்கப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் உயர்ந்த ரக வைன் தயாரிக்கப்படும் நாடான ஆஸ்திரேலியாவில் வைனின் தரத்தை மேலும் உயர்த்துவதற்காக ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு கூடத்தில் இதுசம்பந்தப்பட்ட பரிசோதனைகளை நிபுணர்கள் நடத்தி வருகிறார்கள்.**

ஆஸ்திரேலியாவில் பழங்காலந்தொட்டே வைன் உற்பத்தி இடம் பெற்று வந்துள்ளது. 1788-ம் வருடத்தில் நியூசவுத்வேல்ஸில் மக்கள் குடியேறத் தொடங்கியதிலிருந்து வைன் தயாரிப்பு ஆரம்பமாகியது.

ஆடு, மாடு, கோதுமையெல்லாம் வளர்க்கப்படு முன்னர் ஆஸ்திரேலியாவில் வைன் தயாரிக்கப்பட்டு வந்தது.

இங்கு முதலில் இந்த உற்பத்திக்கு அதிக வெற்றி கிட்டவில்லை. சிட்னியைச் சுற்றியுள்ள நிலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட முந்திரிக்கொடி அதிக செழிப்பாக வளராததே இதற்குக் காரணம்.

1830-ம் வருடமளவில் 365 வகையான முந்திரிக்கொடிகள் உற்பத்தியாகத் தொடங்கின. நியூசவுத்வேல்ஸிலுள்ள ஹண்டர் ஆற்றுப் பள்ளத்தாக்கில் முந்திரிக்கொடி வளரத் தொடங்கியதிலிருந்து இங்கு வைன் உற்பத்தி அதிக வெற்றியடையத் தொடங்கியது. 1860-ம் வருடத்தில் சர்வதேசபோட்டியொன்று இடம் பெற்றபோது ஆஸ்திரேலியா வைன் முதற் பரிசைத் தட்டிக் கொண்டது.

### வருடமொன்றுக்கு மூன்றரைக் கோடி கலன் வைன்

இன்று ஆஸ்திரேலியாவில் 1 லட்சத்து 31 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் முந்திரிக்கொடி உற்பத்தியாகிறது. வருடமொன்றுக்கு 3 கோடியே 50 லட்சம் கலன் வைன் தயாரிக்கப்படுகிறது. 1962-ம் வருடத்திலிருந்து 41,000,000 கலன் வைன் தயாரிக்கப்பட்டது. இதில் 18,500,000 கலன் வைன் போஷாக்கு சக்தி நிறைந்த பானமாகவும் மிகுதி பிராந்தி போன்ற குடிவகைகள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படும்.

தென் ஆஸ்திரேலியா, விக்டோரியா, நியூசவுத்வேல்ஸ ஆகிய இடங்கள் ஆஸ்திரேலியாவின் பிரதான முந்திரிக்கொடி உற்பத்தியாகும் இடங்கள்.

மேற்கு ஆஸ்திரேலியாவில் சிறிதளவு வைன் தயாரிக்கப்படுகிறது, அடிலேடுக்கு சில மைல் தூரத்தில் தென் ஆஸ்திரேலியாவிலுள்ள அழகு வாய்ந்த பருசா பள்ளத்தாக்கில் அதிக அளவு முந்திரிக்கொடி உற்பத்தியாகிறது. நாட்டுக்குத் தேவையான வைனில் 80 சத வீதமான வைன் இங்கு தயாராகிறது. நியூசவுத்வேல்ஸிலுள்ள ஹண்டா ஆற்றுப்பகுதி, ருத்தர்கிளென், வகுங்கா, ஷில்டோர்ன், தாபில்க், விக்டோரியாவிலுள்ள மில்லாவா ஆகிய இடங்களில் மிகுதி 20சத வீதமான வைன் தயாரிக்கப்படுகிறது.

மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் ஆஸ்திரேலியாவில் வைன் தயாரிப்பு அதிகமாக இருக்கிறது. ஆஸ்திரேலியா முந்திரிக்கொடி உற்பத்தியில் தாமதமாக நாட்டம் காட்டியதாலேயே இவ்வித முன்னேற்றம் ஏற்பட்டிருக்கலாம். மற்ற நாடுகளின் அனுபவத்தை இந்த உற்பத்தியில ஆஸ்திரேலியா கையாண்டது மிக்க பயனைத் தந்துள்ளது.

ஆஸ்திரேலியா வைன் தயாரிக்க நவீன சாதனங்களை சுகாதாரமான முறையில் உபயோகப்படுத்துவது இங்கு தயாரிக்கப்படும் வைனுக்கு அதிக கிராக்கியைக் கொடுக்கிறது. அமெரிக்காவிலிருந்தும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இங்கு வருபவர்கள் இந்த வைனை மிகவும் பாராட்டியுள்ளார்கள் சில சுத்தியஸ்தர்கள் ஆஸ்திரேலியா வைனை மிகவும் புகழ்ந்துள்ளார்கள்.

### வைன் ஆராய்ச்சி ஆய்வுகூடம்

ஏற்கனவே புகழ் பெற்ற வைனின் தரத்தை உயர்த்துவதற்கு ஆஸ்திரேலியாவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1955-ம் வருடத்தில் ஆஸ்திரேலியா சமஷ்டி பார்லிமெண்ட் வைன் ஆராய்ச்சி மசோதா ஒன்றை நிறைவேற்றியது. இதற்கு மூன்று வருடங்களின் பின் தென் ஆஸ்திரேலியாவில் மவுண்ட் லொப்டினேஞ்சஸில் வைன் ஆராய்ச்சிக் கூடம் ஒன்று திறக்கப்பட்டது. நல்ல வகையான முல்லைக்கொடிகள் எந்த நிலத்தில் வளரும் என்பது பற்றியும் உயர்ந்த ரக வைன் தயாரிப்பது சம்பந்தமாகவும் இங்குள்ள நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இந்த நிபுணர்களை கண்டுபிடிப்பு ஆஸ்திரேலியாவில் உயர்ந்த ரக வைன் தயாரிக்க பெரிதும் உதவி வருகிறது.

ஆஸ்திரேலியாவிலுள்ள பிரதான கைத்தொழில்களில் வைன் தயாரிப்பு நான்காவது இடம் வகிக்கிறது. 8 கோடியிலிருந்து 10 கோடி ஆஸ்திரேலியா பவுண்வரை இந்த தயாரிப்புக்காக முதலீடு செய்யப்படுகிறது.

ஆஸ்திரேலியர்கள் இப்பொழுது அதிகமான அளவு வைனை அருந்துகிறார்கள். 51 நாடுகளுக்கு இங்கிருந்து வைன் ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1961-ம் வருடம் ஜூலை மாதத்திலிருந்து 1962-ம் வருடம் ஜூன் வரையான 12 மாதங்களில் 1,677,659 கலன் வைன் ஏற்றுமதி செய்யப்பட்டது.

---

கொழும்புக் கல்லூரி அதிபர் ஒருவர் கூறுகின்றார். அப்படியாயின் ஏன் கலைப்பகுதியைத் தொடர்ந்து நடத்த வேண்டும்?

படிப்பின் நோக்கம், வேலை பெறுவதும், ஜீவனம் நடத்துவதும் மட்டுமல்ல. மனப் பண்பாடும் அறிவு வளர்ச்சியுமே கல்வியின் நோக்கங்களாதலால், உயர்தரப் படிப்பு படிக்கத் தகுதியுள்ள யாரையும் அது படிக்க முடியாதபடி எக்காரணம்பற்றியும் தடுக்கப்படாது. ஒருபுறம் எல்லாருக்கும் இலவசக்கல்வி அளிக்கிறோமென்று கூறிக்கொண்டு, மறுபக்கம் தகுதியுள்ள மாணவ மாணவிகளுக்கும், கல்வி வசதி அளிக்காமல் இருப்பது நேர்மையோ நீதியோ ஆகாது.

---

## விசாரணை வேண்டும்

மதவாச்சியில் ஏற்பட்ட ரயில் விபத்துக்கு, நாசவேலையோ, அல்லது தனிப்பட்டவர்கள் யாருமோ காரணமில்லை என்று ஜெனரல் மனேஜர் ரம்பாலா கூறுகின்றார். பின் இதற்கு என்ன காரணம்? அரை மைல் தூரம்வரை இஞ்சின், ரயில் பாதையை விட்டகன்று பல வண்டிகளும் தடம்புரண்டுள்ளன. ஏராளமான நஷ்டம். போக்குவரத்தும் பெரிதும் சீர்குலைந்துள்ளது. நல்லவேளை. இது பிரயாணிகள் வண்டியாக இல்லாமற் போயிற்று. பிரயாணிகள் வண்டியாக இருந்திருப்பின் பெரும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம். இது சாதாரண சிறிய விபத்தல்ல. இவ்வித விபத்துக்கள் நடக்கும்போது, தக்க நிபுணர்களடங்கிய விசாரணைக் கமிஷனை நியமித்து, உண்மை காரணங்களைக்கண்டு, இனி இவ்விதம் நடவாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதே வழக்கமாகும். இவ்விஷயமாகவும், அவ்வித கமிஷனை நியமித்து, விபத்துக்கான காரணத்தை அறிந்து, இதற்குப் பொறுப்பானவர்களை தண்டிப்பதுடன், இனி இவ்விதம் நடவாமல் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்.

---

## கருப்பட்டிக்கு அதிக கிராக்கி

### சீனித் தட்டுப்பாடு காரணம்

ரக்வானை, வியாழன்

சீனித் தட்டுப்பாடு காரணமாக இங்குள்ள கடைகளில் கருப்பட்டி அதிகம் விலைப்படுகிறது.

தேநீர் கடைகளில் சீனித் தட்டுப்பாடு காரணமாக தேநீர் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. சில தேநீர் கடைகளில் தேனீருடன் இனிப்பு வழங்கிப்படுகிறது.

---

## பயிர்ச் செய்கைக் குழு

ஊர்காவற்றுறை, வியாழன்

நாரந்தனைக் கிரமாத்தின் பயிர்ச்செய்கைக்குழு தெரிவுக் கூட்டம் ஒன்று அண்மையில் நாரந்தனை ஆர். ஸி. பாடசாலையில் நடைபெற்றது.

பின்வருபவர்கள் குழுவின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வை. பாலசிங்கம், காரியதரிசி: திரு. அல்பிரட், தனதிகாரி: திரு. எஸ். ஜேம்ஸ். பதினொரு பேர் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டது.

## ஐயாறன் எழுதுவது

மூன்று சதம் தபாலட்டை இனி ஐந்து சதமாகுமாம். பதிவுத்தபால், இன்ஷியூர் தபால், பார்சல்போஸ்ட், மணியோடர், போஸ்டல் ஓடர் முதலிய கட்டணங்களையும் உயர்த்த காருண்ய அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இதைப்பற்றி நாம் வியப்படைவதற்கில்லை. இவ்வளவு காலமாக இக்கட்டணங்களை உயர்த்தாமல் விட்டிருந்தது தான் ஆச்சரியமாகும். இக்கட்டண உயர்வு மூலம் 26 லட்ச ரூபாய் அதிகமாக வருமானம் கிடைக்குமாம். ஏன், இதனால் மக்களின் வாழ்க்கைச் செலவுகளும் அதிகரிக்கக்கூடும். கார்டுகளை அதிகமாகப் பாவிப்பது ஏழைகள் தான். கட்டணத்தை உயர்த்தியபின்பாவது தபால்கள் சுணங்காமல் கிடைக்குமா பார்ப்போம்!

* * *

இலங்கை கடற்படையினர் இனி வெளிநாட்டு மதுபானங்களுக்கும் சிகெரெட்டுகளுக்கும் தீர்வை செலுத்த வேண்டுமாம். இதுவரை இருந்த இத்தீர்வைச் சலுகை நீக்கப்பட்டுவிட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. கடற்படை விசாரணைக்கமிஷனால் ஏற்பட்ட ஒரு நல்ல பலன் இது.

ஆனால் இலங்கையிலே கல்லோயாவில் மதுபானங்களை அரசாங்கம் தயாரித்து வருகிறது. அப்படியிருக்க வெளிநாடுகளிலிருந்து, ஏன் மதுபானங்களை இன்னும் வரவழைக்க வேண்டும்! நாட்டின் செலாவணியைப் பாதுகாக்க வேண்டிய இச்சமயத்தில், மக்கள் பாவிக்கும் வெல்லம், புளி முதலிய சரக்குகளுக்கு அரசாங்கம் தடை விதித்திருக்கையில் ஏன் குடிவகைகளை மட்டும் இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும்?

* * *

யாழ்ப்பாண மாநகரசபைக்கு துரைராஜா அவர்கள் மீண்டும் மேயராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். போட்டி எதுவுமின்றி இவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்ற மூன்று வருடத்துக்குள்ளாக, யாழ்ப்பாண மேயர் பதவியில் ஐந்து முறை மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. மக்களின் நன்மைக்காக எல்லா மெம்பர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று புதிய மேயர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அடுத்த நம்பிக்கை இல்லாத்தீர்மானம் எப்போது வருகிறதோ என்பது இங்குள்ள பொதுமக்களின் கவலையாகும்.

* * *

நாய்தான் வாலை ஆட்டுவது வழக்கம். ஆனால் நாயை வாலாட்டுவது போலுள்ளது கொழும்பிலிருந்து கிடைத்த ஒரு செய்தி. அரசாங்க காரியாலயங்களிலே, "சமஸ்த லங்கா ராஜ்ய லிபிகரு சங்கமயா" எனும் சங்கத்தில் 4000 மெம்பர்களுள்ளனராம். அவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை முதல், சிங்களத்தைத் தவிர தமிழ், அல்லது ஆங்கிலத்தில் கிடைக்கும் கடிதங்களைக் கையாளுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறார்களாம். மூன்று மொழிகளில் எதில் வேண்டுமானாலும் பொதுமக்கள் எழுதலாமென்றும், அந்தந்த மொழிகளில் பதில் அனுப்பப்படுமென்றும் உறுதி கூறப்பட்டது. ஆனால் சிப்பந்திகளில் சிலரோ இப்படி வகுப்புவாத முறையில் தீர்மானம் செய்துள்ளனர். இதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? பொதுமக்களுக்காகச் சிப்பந்திகளா? அல்லது

(5-ம் பக்கம் பார்க்க)

# சீன - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிகள்

## ஜூன் 5-ல் கூடும்

பீகிங், மே 16

சோவியத் கமயூனிஸ்ட் கட்சிக்கும் சீன கம்யூனிஸ்ட்கட்சிக்குமிடையே நிலவும் கருத்து வேற்றுமைகளை நீக்கும் பொருட்டு ஜூன் மாதம் 5-ம் திகதி மாஸ்கோவில் பேச்சுக்கள் நடைபெறும்,

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீனகம்யூனிஸ்ட்கட்சிக்குமிடையே நிலவும் கருத்து வேற்றுமைகளை நீக்கும் பொருட்டு இம்மாத நடுப்பகுதியில் இரண்டு நாட்டுத் தலைவர்களுக்குமிடையே பேச்சுக்கள் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. சோவியத் பிரதமர் குருஷ்சேவ் பீக்கிங் சென்று இதுசம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடாத்த வாய்ப்புகள் இருக்காது என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜூன் மாதத்தில் மாஸ்கோவில் பேச்சுக்களை வைத்துக் கொள்ளலாம் என்று சீன கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்திருந்தது.

மாஸ்கோவில் ஜூன் மாதம் 5-ம் திகதி நடைபெறும் பேச்சுக்களுக்கு சீனத் தலைவர் மா-ஸே-துங் செல்வார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டபோதிலும் அவர் செல்வதற்கான வாய்ப்பு இருக்காதென்று தெரியவருகிறது' சீன கம்யூனிஸ்ட்கட்சியின் பிரதிநிதிகள் கோஷ்டியொன்று இம்மாதம் பிற்பகுதியில் மாஸ்கோவுக்குப் புறப்பட்டுச் செல்லும்.

## மதுரை மீனுட்சி கோவில் பற்றி பேச்சு

இன்றிரவு 9-15-க்கு மதுரை மீனுட்சி கோவிலைப் பற்றி இலங்கை வானெலியின் தேசிய ஒலிபரப்பில், திரு. அருள் தியாகராஜா பேசுவார். இப்பேச்சு மதுரையில் 28-6-63-ல் நடக்கவிருக்கும்கும்பாபிஷேகத்துடன் சம்பந்தப்பட்டதாக அமையும்.

—

## கேணிப் பாதுகாவலரின் பண்பு

மாவிட்டபுரம், வியாழன்

கீரிமலைக்கேணியில் இருந்து சுமார் ரூ 400 பெறுமதியான 4 மோதிரங்களை கேணிப்பாதுகாவலர் திரு கே. சின்னத்துரை கண்டெடுத்துள்ளார். இவர் இம் மோதிரங்களை கண்டெடுக்கும் போது கேணியில் பலர் நீராடிக் கொண்டிருந்தனர். அவர்களும் இவருடன் சேர்ந்து தேடினுர்கள். ஆனல் இம்மோதிரங்கள் நான்கும் திரு. சின்னத்துரையின் கண்ணில் சிக்கின. இதனையிட்டு நமது நிருபர் அவரிடம் 'இம் மோதிரங்கள் மற்றவர்களின் கண்களில் தட்டுப்படாமல் உங்களின் கண்ணில் மட்டும் தட்டுப்படுவதற்கு ஏதாவது காரணமுண்டா?' என்றுகேட்டபோது, அவர் மற்றவர்கள் பார்ப்பதை விட பொருளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பார்ப்பதுவே இதற்குக் காரணம் எனக் கூறினுர்.

திரு. சின்னத்துரை கேணிப் பாதுகாவலராக நியமிக்கப்பட்ட பின் இதுவரையும் சுமார் 10 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுள்ள பொருட்களைக் கண்டெடுத்துள்ளார் அவற்றைப் பின் உரியவர்களிடம் சேர்ப்பித்திருக்கிறுர். இப்பணிக்காக அவருக்கு யாராவது சன்மானம் கொடுக்க முயன்ருல் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. இவரின் சேவையை சிங்கள மக்கள் உட்பட அரசாங்க உத்தியோகஸ்தர்களும் பாராட்டியுள்ளனர்.

—

## "படைபலத்தை சீனு பெருக்குகிறது"

வாஷிங்டன், மே 16

கனடா சென்றிருந்த இந்திய மத்திய மந்திரி திரு. டி. டி; கிருஷ்ணமாச்சாரி இன்று வாஷிங்டன் வந்து சேர்ந்தார்.

பத்திரிகை நிருபர்களுக்கு திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அளித்ததொரு பேட்டியில், சீனர்களினுல் தென் கிழக்காகிய நாடுகளுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்றும் சீனு படை பலத்தைப் பெருக்கி வருகிறதென்றும் கூறினுர்.

## தமிழ் பிரச்சார சபை

வெல்லம்பிட்டி, வியாழன்

தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு தமிழ் மொழியை இலவசமாகக் கற்பிக்கும் உரிய நோக்கத்துடன் "தமிழ் பிரசார சபை" என்ற பெயரில் புதியதோர் சங்கம் வெல்லம்பிட்டியில் சாந்தி சேகர் கல்லூரியின் அதிபர் திரு. எம். ஜி. ஜோர்ஜ் சேகர் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சனிக்கிழமை தோறும் இவ்வகுப்புக்கள் இலவசமாக நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

—

## உலகினை வலம்வரும்....

(1-ம் பக்க தொடர்ச்சி)

ரவு செய்ய வேண்டம் என்று வான்வெளி ஆராய்ச்சி நிலையங்கள் கேட்டுள்ளன.

### சீனு இந்தியா மீது பறந்தார்

இன்று காலை மேஜர் கூப்பரின் வான்வெளிக் கப்பல் இந்தியா மீது பறந்து சென்றதென்றும் உலகினை ஏழாவது தடவையாக வலம் வந்தபொழுது வான்வெளிக்கப்பல் சீனு மீது பறந்து சென்றதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### படம் பிடித்தார்

வான்வெளிக் கப்பலில் பிரயாணம் செய்யும் மேஜர் கார்டன் கூப்பர் சில படங்களைப் பிடித்தார். கப்பலில் இருந்த வண்ணமே அவர் ஜோகனர்ஸ் பேர்க்கையும் கடற்கரையோரங்களையும் பார்த்தார்.

கூப்பர் திட்டமிட்டபடி உலகினை 22 தடவைகள் வலம் வருவார் என்றும் அவர் வெற்றியுடன் பூமிக்குத் திரும்புவார் என்றும் அமெரிக்க வான்வெளி ஆராச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். வான்வெளிக் கப்பலின் இயக்கத்தையும் வீரர் மேஜர் கார்டன் கூப்பரின் ஒவ்வொரு செயல்களையும் கண்காணிப்பு நிலையங்கள் தொடர்ந்து அவதானித்து வருகின்றன.

—

## பிரிவுபசாரம்

மன்னுர், வியாழன்

மன்னுர் உணவுக் கட்டுப்பாட்டுக் கந்தோரிலுள்ள விநியோக நிலையத்தில் கடமையாற்றிய ஸ்ரோர்கீப்பர் திரு. ஏ. வி. தம்பிராஜா யாழ்ப்பாணம் விநியோக நிலையத்துக்கு இம்மாதம் முதல் திகதியிலிருந்து இடமாற்றம் செய்ததையிட்டு நிலையத்திலுள்ள ஊழியர்களாலும், மன்னுர் கூட்டுறவு தொழிலாளர் சங்கத்தாலும் பிரியாவிடை அளிக்கப்பட்டது.

## ஆரம்ப விழா

பருத்தித்துறை, வியாழன்

குடாநாட்டுக் கைத்தொழில் கூட்டுத்தாபனம் முதல் முயற்சியாக மேற்கொண்ட போத்தலில் அடைத்த பானங்கள் உற்பத்தியின் ஆரம்பவிழா வைபவத்தை சிறப்பான முறையில் நடத்தியது.

பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. யே. டி ஆர்னல்ட் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம், செனட்டர் திரு. ஜி. நல்லையா, புலோலி கிராம சபையின் தலைவர் திரு. செ. மாணிக்கவாசகர், நியாயவாதி திரு. கே. ஜெயக்கொடி, திருவாளர்கள் ஏ. கே. இராமலிங்கம், ஆர். நவரத்தினம் முதலான பலர் இவ்விழாவில் பிரதம பேச்சாளர்களாக கலந்துகொண்டனர்.

—

## வட்டார விஸ்தரிப்பு

### கி. ச. தீர்மானம்

வேலணை, வியாழன்

"ஒவ்வொரு சமூகமும் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய முறையில் வட்டாரங்களைப் பிரிப்பதற்கு திட்டங்களையும் ஆலோசனையையும் தருமாறு நான் சபை அங்கத்தவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். புதிய வட்டாரப் பிரிவினை நடைபெறுமானல் சிறுபான்மைச் சமூகத்தினர்கள் அனைவரும் போதிய பிரதிநிதித்துவம் வகிக்க முடியும்" இவ்வாறு வேலணைக் கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் பேசிய தலைவர் க. சதாசிவம் குறிப்பிட்டார். திரு. ச. மாணிக்கவாசகர், திரு. க. இராமசாமி, திரு. மு. வினசித்தம்பி, திரு. சு. தருமலிங்கம், திரு. ச. சபாரத்தினம் ஆகியோர் வட்டாரப் பிரிவினையை ஆதரித்துப் பேசினர். முடிவில் வட்டார விஸ்தரிப்பு பற்றிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

—

## காணிபெற உதவி

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனிக்குளம், அக்கரையான்குளம், நாககட்டுவன் ஆகிய பகுதிகளில் காணிபெற விரும்புபவர்களுக்கு வேண்டிய உதவிகளை உருத்திரபுரம் சமசமாஜ வாலிபர் சங்கம் செய்து கொடுக்கத் தயாராக உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இந்த வாலிபர் சங்கம் தற்போது விவசாயிகளுக்கு விண்ணப்பப்பத்திரங்களை விநியோகித்து வருகிறது. குடியேற்றத்திட்டங்களில் காணிபெறவிரும்புவோர் பூநகரி, கரைச்சி, துணுக்காய், பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள வாலிபர் சங்கங்களில் விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப் முடிவு திகதி இம்மாதம் 20-ம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது.

—

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிப்பந்திகளுக்காகப் பொது மக்களா?

* * *

விரைந்தாலும் நல்குரவே
செல்வே பொல்லா வெகுட்
சியே மகிழ்ச்சியே பொறுப்பே
நீங்கள், நிரைந்தோடி மாநில
த்தை [illegible]த்துத்தின் பிர்க்கில்
லை[illegible] நுர்போகம்யானேல்
வானேர், கரைந்தோட வரு
நஞ்சையமுது செய்த கற்பகத்
தைத் தற்பரத்தை திருவாரு
ரில், பரஞ்சோதிதனைக் காண்
பேன் படேன்நும் பண்பிற்
பரிந்தோடி யோட்டந்து
பகட்டன்மின்னே.

— திருநாவுக்கரசர்

## கோயில் ஐயர் கொலை...

(1-ம் பக்க தொடர்ச்சி)

சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் நேற்று இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மாஜிஸ்டிரேட் கோர்ட்டு பிரதம லிகிதர் திரு. சின்னத்துரையை, மூன்ருவது எதிரியாகிய கோகிலாம்பாள் குறுக்குவிசாரணை செய்தார்.

1963-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 14-ம் திகதி உருத்திரபுரம் கோயில் ஐயர் காசிலிங்க சர்மாவை, முத்தர் வேலுப்பிள்ளை, ஆர். பசுபதி, கோகிலாம்பாள் ஆகியோர் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டி இவ் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முதலாவது எதிரி முத்தர் வேலுப்பிள்ளை சார்பில் திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடனும், இரண்டாவது எதிரி ஆர். பசுபதி சார்பில் திரு. டி' கணேசலிங்கம், திரு. எஸ். செல்லத்தம்பியின் அனுசரணையுடனும் ஆஜரானுர்கள். மூன்ருவது எதிரியாகிய கோகிலாம்பாள் சார்பில் எவரும் ஆஜராகவில்லை. கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர். பொன்னுத்துரை வழக்கை நடத்தினுர்.

### லிகிதர் சாட்சியம்

சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டு பிரதம லிகிதர் திரு. வீ சின்னத்துரை சாட்சியமளித்தார்.

2-ம் எதிரியின் வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் அவரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: பதிவு அறையின் வாசலில் பிஸ்கால் மேற்றன் இருந்தார்?

லிகிதர்: ஆம்.

வழ: கந்தோருக்கு உள்ளேயா?

லிகி: ஆம்.

வழ: கந்தோருக்கும் பதிவு அறைக்கும் இடையில்?

லிகி: ஆம்.

வழ: கந்தோருக்கும் பதிவு அறைக்கும் நடுவில் ஒரு சின்ன சாப்பாட்டு அறை உண்டு.

லிகி: ஆம்.

வழ: 3-வது எதிரி கோகிலாம்பாள் அந்த சாப்பாட்டு அறையில் இருந்தாரா?

லிகி: ஆம்.

வழ: உமது மேசையிலிருந்து 3 வது எதிரி எங்கிருந்தார் என்று காணமுடியுமா?

லிகி: ஆம்.

வழ: பிஸகால் "மேற்றனை" மட்டும் தான் காணலாம்.

லிகி. 3-வது எதிரியையும் காணலாம்.

வழ: உமது வழக்கமான கடமைகளைச் செய்துகொண்டிருந்தீர்?

லிகி: ஆம்.

வழ: இன்ஸ்பெக்டர் பொன்னுத்துரை கந்தோருக்குள் வந்ததைக் கண்டீரா?

லிகி: இல்லை.

வழ: கந்தோர் வெளிவிருந்தையிலிருந்து 'மேற்றன்' இருக்கும் இடத்தை பார்க்க முடியும்?

லிகி: ஆம்.

வழ: அந்த அறையில் யன்னல் உண்டு.

லிகி: ஆம்.

வழ: யன்னலுக்கு ஊடாகவும் மேற்றனை பார்க்கலாம்?

லிகி: ஆம்.

வழ: வெளியிலும், வாடிவீட்டுப் பக்கத்திலும யன்னல் உண்டு?

லிகி: ஆம், ஆனல் அந்த யன்னல் திறக்கமுடியாது.

வழக்: 3-வது எதிரியுடன் பிஸ்கால் மேற்றன் வந்தவரா?

லிகி: ஆம்.

### கோகிலாம்பாள் குறுக்குவிசாரணை

3-வது எதிரியாகிய கோகிலாம்பாள், சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட் பிரதம லிகிதரை குறுக்குவிசாரணை செய்தார்.

கோகி: இன்ஸ்பெக்டர் சாப்பாடு கொண்டுவந்தார்?

லிகி: இல்லை.

கோகி: மத்தியானம் 12 மணிக்கு இன்ஸ்பெக்டர் அந்த அறைக்கு வந்தார்?

லிகி: இல்லை.

கோகி: இன்ஸ்பெக்டர் அந்த அறை மேசையிலிருந்து சாப்பிட்டார்?

லிகி: இல்லை.

யாழ்ப்பாணம் பொலிஸைச் சேர்ந்த மாதிரிப் படம் வரைபவர், ஹேவவிதாரண சமட்சியமளிக்கும் போது, 21-4-63-ல் மாலை நாலு மணிக்கு சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றதாகவும், அப்பொழுது அங்கே இன்ஸபெக்டர் பொன்னுத்துரை, ராஜலட்சுமி, குப்புசாமி ஐயர், வேலுப்பிள்ளை, கந்தையா, கான்ஸ்டபிள் தயாரத்தின ஆகியோர் இருந்ததாகவும் கூறினுர்.

முதலாவது எதிரியின் வழக்கறிஞர் திரு. ஏ. அமிர்தலிங்கம சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ. சம்பவம் நடந்த இடத்திற்கு யாருடன் சென்றீர்?

ஹேவ' இன்ஸபெக்டர் பொன்னுத்துரையுடன்,

வழ: காட்டிற்கு எப்படிப் போனீர்கள்?

ஹேர: மௌனம்.

வழ: காட்டிற்குப் எப்படிப் போனீர்கள்?

(இந்த நிலையில் ஆங்கிலத்தில் பதில் சொல்லிவந்த மாதிரிப் படப்பிடிப்பாளர், சிங்களத்தில் பதில் சொல்ல விரும்புவதாகத் தெரிவித்தார். அதன் பின் சிங்கள மொழிபெயர்ப்பாளர் வந்ததும் தொடர்ந்து விசாரணை நடைபெற்றது)

வழ: காட்டிற்கு எப்படிப் போனீர்கள்?

ஹேவ: நடந்துபோனேம்.

வழ: எங்கிருந்து போனீர்கள்?

ஹேவ: சம்பவம் நடந்த இடத்திலிருந்து.

வழ. ரோட் இருந்ததா?

ஹேவ, காலடிப் பாதை ஒன்றிருந்தது.

வழ: அப்பாதையின் அகலமென்ன?

ஹேவ: 3 அடி அகலம்.

2-வது எதிரியின் வழக்கறிஞர் திரு. டீ. கணேசலிங்கம் குறுக்குவிசாரணை செய்தார்.

வழ: இதற்கு முன் இப்படி மாதிரிப்படம் வரைந்திருக்கிறீரா?

ஹேவ: ஆம்.

வழ: காசிலிங்கசர்மாவின் வளவு படலையை அடையாளமிட்டிருக்கிறீரா?

ஹேவ: ஆம்.

வழ: கான்ஸடபிள் தயதாசா 2-ம் எதிரி நின்ற இடத்தை உமக்குக் காட்டினரா?

ஹேவ: இல்லை.

நீதிபதி எதிரிகளைப்பார்த்து ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா? என்று மூன்று எதிரிகளையும் தனித்தனியே கேட்டபோது இல்லையென்று பதில் அளித்தார்கள். இந்தக் கோர்ட்டில் சாட்சி சொல்லவில்லையென்றும், சாட்சியைக் கூப்பிடவில்லையென்றும் எதிரிகள் தெரிவித்தார்கள்.

இதைத் தொடர்ந்து நீதிபதி இவ்வழக்கைவடபகுதிஅசைஸ கோர்ட்டிற்கு பாரப்படுத்தி, எதிரிகளை கைவிரல் அடையாளம் எடுப்பதற்காக, இம்மாதம் 23-ம் திகதி ஆஜராகுமாறு தெரிவித்தார்,

—

## வருடாந்த கைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 3-வது கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இவ்வருடம் பல விளையாட்டுக் கழகங்கள் இப் போட்டியில் கலந்து கொள்ளும் என எதிர் பார்க்கப்படுகிறது.

# "பதவிக்காக தர்க்கப்படும் நிலைமாற வேண்டும்"
## மேயர் தெரிவின் பின் அங்கத்தவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று முன் தினம் நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் திரு. டி. எஸ். துரைராசா புதிய மேயராகத் தெரிவுசெய்யப்பட்டதும் அவரை அங்கத்தவர்கள் பாராட்டிப் பேசினர்.

திரு. கே. எஸ். நடராசா புதிய மேயரைப் பாராட்டிப் பேசுகையில் கூறியதாவது:-

நகரம் சீரானமுறையில் நடத்தப்படவேண்டும். நிர்வாகத்தை பட்சபாதமின்றி நடத்தவும் வேண்டும். யாழ்ப்பாணத்தை முன்னேற்று மளவிற்கு நாம் அதிர்ஷ்டசாலிகளாவோம்.

திரு. பீ. ச. சோமசுந்தரம் பேசுகையில், இந்நாட்டில் இச்சபை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனைச் சரியான முறையில் வழிநடத்த புதிய மேயர் முயலவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும், இச்சபை இழந்த தனது பெருமைகளை மீண்டும்பெற வழிவகைசெய்ய வேண்டுமெனவும், தமது ஆதரவு மேயருக்குப் பூரணமாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

குவாஸி எம்.எம். சுல்த்தான் மேயரைப்பாராட்டிப் பேசுகையில் யாழ்ப்பாணத்தின் பெருமையைப் புதிய மேயர் மேலும் வளர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு. என்.டி. செல்லத்துரை பேசுகையில் மாநகரசபையின் சீர்கேட்டைப் புதிய மேயர் களைந்தெறிய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

திரு. ஜே. எஸ். அழகையா பேசும்போது சொல்லியதாவது:-

இன்று நடைபெற்ற ஏகமனதான மேயர் தெரிவு யாழ்ப்பாணம் எதிர்காலத்தில் சிறப்புடையதாக இருக்கும் என்று உணரச் செய்கின்றது இன்று இச்சபைக்குத் ,தங்களைப் போன்ற துணிவுள்ளவர்கள் தான் தேவை. கடந்த காலத்தில் நாம் எதனைச் சாதித்துவிட்டோம் என்பதனை நினைத்து வருந்தவேண்டியுள்ளது. எதிர்காலம் சொற்பமானதாயினும் துரிதமாகப் புதிய மேயர், மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக. நாமிருக்க சில நன்மைகளைச் செய்ய வேண்டும். மக்கள் எம்மைச் சேவை செய்யவே அனுப்புகிறார்கள். பதவிக்காகத தர்க்கப்படும் நிலைமாறவேண்டும். சபை முதல்வர் தகுதியானவராக இருக்கவேண்டும்.

டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் பேசுகையில் கூறியதாவது: மாநகரசபையின் பதவியைப் படியாகக்கொண்டு சிலர் செயல் புரிந்தமையால் தான் இச் சபைக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. நகர பிதாக்கள் தமது கடமைகள் என்ன என்பதனைச் சரியாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில் 'மாநகரசபை ஊழியர்களிடையே கட்சி பாகுபாடு காட்டாது செயல் புரிய வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

திரு. எம். யேக்கப்பும் பேசினர். புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. டி. எஸ். துரைராசா பேசுகையில் மாநகரசபை அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் நகருக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதாகக் கூறினர்.

# சங்கத்தின் நடவடிக்கை கண்காணிக்கப்படும்
## ஆங்கிலக் கடித புறக்கணிப்பால் எழுந்துள்ள நிலை

கொழும்பு, வியாழன்

ஆங்கிலத்தில் வரும் கடிதங்களைப் புறக்கணிக்குமாறும் ஆங்கிலத்தல் நடத்தப்படவேண்டிய கருமங்களைச் செய்ய வேண்டாமென்றும் இலங்கை முழுவதுமுள்ள 4000 குமாஸ்தாக்களுககு சமஸ்தலங்கா ராஜ்ய லிபிகரு சங்கம் தெரிவிததிருந்த அறிவித்தலைத் தொடர்ந்து பல இலாகாக்களின் அதிபர்கள் கண்காணிப்பு நடத்த உத்தேசித்துள்ளதாக அறிவிக்கபபட்டுள்ளது.

சங்கத்தின் நடவடிக்கை இலாகக்களின் அன்றாட அலுவல்களை எவ்விதம் பாதிக்கிறது என்பது பற்றியும் இவர்கள் அவதானிப்பார்கள்.

27-4-63ல் சங்கம் செய்துகொண்ட தீர்மானத்தின்படி நேற்று முதல் (15-5-63) சகல அலுவல்களையும் சிங்களத்தில் மட்டுமே செய்யவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. சங்கம் இதுபற்றி தனது அங்கத்தவர்களுக்கு ஏற்கனவே அறிவித்திருந்தது.

சங்கத்தின் இவ்வித தீர்மானத்தினால் அரசாங்க சேவைப் பகுதிகளில் ஏதும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாக இதுவரை புகார் ஏதும் தெரிவிக்கப்படவில்லை என திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சங்கத்தின் தீர்மானத்தினால் பிரமாதமான கஷ்டமேதும் ஏற்படவில்லை என நீர்ப்பாசன இலாகா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இங்கு ஏற்கனவே அதிகமான வேலைகள் அரசகருமமொழியிலேயே செய்யப்பட்டு வருவதாகவும் தொழில் நுட்ப வேலைகள் சம்பந்தப்பட்ட கருமங்கள் ஆங்கிலத்தில் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வருமானவரி இலாகா அதிகாரிகள் இதுபற்றித் தெரிவிக்கையில் இதுகுறித்து தெளிவாக ஒன்றும் இல்லை என அபிப்பிராயம் தெரிவித்தார்கள். சங்கத்தின் நடவடிக்கையால் சிலர் பாதிக்கப்படுவார்கள்; சிலர் பாதிக்கப்படமாட்டார்களென்றும் இதன் விளைவைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டுமென்றும் இந்த இலாகா அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

அரசகரும மொழியிலேயே சகல அலுவல்களும் நடைபெற்று வருவதால் தமது இலாகாவின் கருமங்களை அது எந்தவிதத்திலும் பாதிக்காது என பரீட்சை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திறைசேரியின் உத்தரவுப்படி அதிக வேலைகள் சிங்கள மொழியிலேயே ஏற்கனவே நடைபெற்று வருவதால் இப்பொழுது இதுகுறித்து எந்த முடிவும் கூற முடியாது என குடிசனமதிப்பீட்டுஇலாகாஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

பலதரப்பட்ட சுயநலமிகள் அரசகரும மொழிச்சட்டம் அமுலாவதை ஒத்திபோடச் செய்வதற்காக முயற்சி செய்து வருகின்றனர். இந்தச் சுயநலமிகள் தமது முயற்சியில் வெற்றிபெற்ருல் சங்கத்தின் தேசாபிமான நோக்கம் தோற்கடிக்கப்பட்டுவிடும்.

# கிராமசேவகருக்கு பாராட்டு

தருமபுரம், வியாழன்

பரந்தன் பகுதியில் பல வருடங்களாகக் கிராமாதிகாரியாகக் கடமையாற்றிய திரு. த. க. மகாலிங்கம் கிராமசேவகராக முரசு மோட்டைப் பகுதிக்கு மாற்றலாகிச் செல்வதனால் அவருக்குப் பிரிவுபசாரமும், பரந்தனுக்கு கிராம சேவகராக வரும் திரு. எஸ். இராசையாவுக்கு வரவேற்பும் அளித்து பொதுக்கூட்டமொன்று நடத்தப்பட்டது. கிளிநொச்சி எம். பி. திரு. அ. சிவசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள இராமச்சந்திரன், மாணிக்கம், சுப்பிரமணியம் ஆகியோருட்படப் பலர் பேசினர்.

—

# காரைநகர் சிவன்கோவில் திருப்பணிச்சபை கூட்டம்

காரைநகர், வியாழன்

காரைநகர் சிவன் கோவில் மூலஸ்தானம், இராஜகோபுரம் தேர் முதலிய திருப்பணி வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யுமுகமாக நியமிக்கப்பட்ட திருப்பணிச்சபைக் கூட்டம் சென்ற 11-ம் திகதி சுப்பிரமணிய வித்தியாசாலையில் கூட்டப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர்: திருமதி தங்கம்மா நடராசா, உபதலைவர்: திரு இ வே. கார்த்திகேசு, இணைக்காரியதரிசிகள்:- திருவாளர்கள்: அ. நாகலிங்கம், சு. சுந்தரமூர்த்தி, தனாதிகாரி: திரு. ந. சுப்பிரமணியம், உப தனாதிகாரிகள்: திரு. சோ. அம்பலவாணர், திரு. கு. இராசையா.

இவர்களுடன் 10 பேர் கொண்டநிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: சேர் கந்தையா வைத்தியநாதன், பிரம்மஸ்ரீ ச. கணபதீஸ்வரக்குருக்கள்.

இத்திருப்பணி வேலைகள் சம்பந்தமாக பல இடங்களிலும் பிரதிநிதிகளாக வேலை செய்வதற்காக 16 உபதலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

# பிரயாணிகள் . . .

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

ரின் பாய்மரப் படகு ஒன்று பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு தனுஷ்கோடிக்குச் சென்றது. குறிப்பிட்ட படகு, தனுஷ்கோடியிலிருந்து திரும்பிவந்து கொண்டிருக்கையில் காக்கி நிறஉடுப்பு அணிந்த இலங்கை ரோந்து பொலிஸார் ஒன்பது பேர் கொண்ட விசைப்படகு ஒன்று, மேற்படி படகை நோக்கி விரைந்து வந்தது. குறிப்பிட்ட படகில் 30 பிரயாணிகள் இருந்தனர்.

பொலிஸாரின் படகைக் கண்ட பிரயாணிகள் படகு விரைந்து செல்லவே இலங்கைப் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டனர். துப்பாக்கிச் சத்தங்களைக் கேட்டதும் பிரயாணிகள் கதறத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து பிரயாணிகள்படகு நிறுத்தப்பட்டது".

பிரயாணிகள் படகைக் கயிற்றினால் கட்டி இழுத்துச்சென்று அவர்களை இலங்கைப் பொலிஸார் சிங்கள மொழியில் கீழ்த்தரமான முறையில் பேசினர்கள் என்றும் "இலங்கை எல்லைக்குள் ஏன் வந்தீர்கள்?" என்று அவர்கள் கேட்டனரென்றும் பொலிஸார் அவர்களைச் சுட்டுப் பொசுக்கிவிடுவதாகப் பயமுறுத்தினர் என்றும்பிரயாணிகள்படகில் இருந்தவர்கள் அரசாங்க அனுமதிச்சீட்டைக் காட்டியசமயம், இவர்களைப் பொலிஸார் எச்சரித்து திரும்பிச் செல்லுமாறு கோரினர் என்றும் தெரிய வருகிறது. இந்தச் சம்பவம் இராமேஸ்வரம் கடற்கரையிலிருந்து நான்குமைல் தொலைவில் நடைபெற்றது.

# இடதுகை விரல் அடையாளம்
# வாக்காளர் ஒவ்வொருவரும் இடவேண்டும்
## தேர்தல் திருத்தச்சட்ட கமிட்டி ஆலோசனை

கொழும்பு, வியாழன்

தேர்தல் சட்டத்தை திருத்தி அமைப்பது சம்பந்தமாக ஆலோசனைகள் தெரிவிப்பதற்கு பார்லிமெண்டினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் கமிட்டிகீழ்க்காணும் ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளது:

தேர்தல் அதிகாரி வாக்காளர் ஒருவருக்கு வாக்குச்சீட்டை வழங்குமுன் குறிப்பிட்ட வாக்காளரின் இடதுகை பெருவிரல் அடையாளத்தைப் பெற வேண்டும். இதனால் வாக்காளர் ஒருவர் இரு தடவைகள் வாக்களிப்புச்செய்வது தடுக்கப்படலாம். இவ்விதம் இடதுகைப் பெருவிரல் அடையாளத்தை இட மறுப்பவருக்கு வாக்குச்சீட்டு மறுக்கப்பட வேண்டும்.

இடதுகை பெருவிரலை இழந்தவருக்கு அவர் வேறுவிதத்தில் தமது அடையாளத்தை நிரூபித்து வாக்குச் சீட்டைப் பெறக்கூடிய வழிவகைகள் செய்யப்படவேண்டும்.

### கொடி போஸ்டர்மீது தடைவேண்டும்

அபேட்சகர்கள் கொடிகள் பறக்கவிடுவதையும், போஸ்டர்கள் வெளியிடுவதையும், ஒலிபெருக்கிகள் உபயோகிப்பதையும் கட்டுப்படுத்தவேண்டும்.

அபேட்சகர்கள் வாக்கு சேகரிப்பதற்காக அமைக்கும் தேர்தல் கொட்டில்கள் தேவையற்ற ஒன்று. எனவே இவை அமைக்கப்படுவது தடைசெய்யப்படவேண்டும்.

வாக்குச்சாவடிக்கு கால் மைல் தூரத்துக்கு அப்பாலேயே ஆதரவுதேடும்அலுவல்கள் இடம்பெறவேண்டும். இப்பொழுது 50 யார் தூரமே இவ்வித கட்டுப்பாடு எல்லையாகக் கணிக்கப்பட்டுள்ளது.

அபேட்சகர்கள் நியமனப் பத்திரங்கள் தாக்கல்செய்த தினத்திலிருந்து வாக்குகள் எண்ணிமுடியும்வரை அபேட்சகரின் காரிலும் அவரின் ஏஜண்டின் காரிலுமல்லாது மற்ற இடங்களில் பறக்க விடுவது தடைசெய்யப்படவேண்டும்.

இந்தக் கால எல்லையுள் குறிப்பிட்ட அபேட்சகரை ஆதரிக்கும் பொதுக்கூட்ட இடத்திலன்றி மற்றப் பொது இடங்களில் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுவதோ, போஸ்டர்கள் வெளியிடுவதோ,சுலோகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளைக் கொண்டு செல்வதோ தடைசெய்யப்படவேண்டும்.

### ஊர்வலங்கள் தடை செய்யப்படவேண்டும்

மேற்குறிப்பிட்டகால எல்லையுள் வரும் மேதினத்திலும், மற்றச் சமயவைபவங்களை ஒட்டிய தினங்களிலுமல்லாது, மற்ற அரசியல் விஷயங்களுக்காக ஊர்வலங்கள் நடத்தப்படுவது தடைசெய்யப்படவேண்டும்.

இந்தக் கால எல்லையுள் தேர்தல் கூட்டங்களிலல்லாது மற்ற சமயங்களில் ஒலி பெருக்கிகள் உபயோகப்படுத்துவதையும் தடைசெய்யவேண்டும்.

# சுதந்திரக் கட்சி மகாநாடு
## பதுளையில் நடைபெறும்

பதுளை, புதன்

ஊவாமாகணத்தைச் சேர்ந்த அரசாங்கக் கட்சி எம்.பி.க்களும் அவர்களது ஆதரவாளர்களும் பதுளை நகரசபைத் தலைவர் திரு. ஜி. பி. மார்ட்டின்சில்வா தலைமையில்பதுளை நகர மண்டபத்தில் ஒரு மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

பதுளையில் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாட்டுக்கான ஏற்பாடுகள் பற்றி இந்த மகா நாட்டில் ஆலோசனை செய்யப்பட்டது.

மகா நாட்டுக்கான ஒழுங்குகளைச் செய்யும் பொறுப்பு பதுளை மாவட்ட சுதந்திரக் கட்சிக் கிளைக்காரியதரிசி, தலைவர், தனாதிகாரி ஆகியோரிடம் ஒப்படைக்கப் பட்டது.

—

# "ஜே. ஆரின் அக்கறை"

கண்டி, வியாழன்

"நாடற்றவர்கள்" பல லட்ச மக்களைப் பாதித்துள்ள இலங்கை—இந்தியர் பிரச்னை விரைவில் தீர்க்கப்பட்டுவிடுமென யு. என். பி. தலைவர்களில் ஒருவரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன புதுடில்லியில் தெரிவித்திருக்கிறார். இந்தியர் பிரச்னையில் திரு. ஜயவர்த்தன திடீர் அக்கறை காட்டுவது ஆச்சரியத்தைக் கொடுக்கிறதென்று" இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு.எஸ். நடேசன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யு. என். பி. ஆட்சியிலிருந்த ஒன்பது வருடத்தில் இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகண்டிருக்கலாமென்றும்'ஏன் அப்பொழுது தீர்வுகாணத் தவறினர்களென்றும் நடேசன் தமது அறிக்கையில் கேட்டுள்ளார்.

இலங்கை-இந்தியப் பிரச்னை தீர்க்கப்படுவதைத் தாங்கள் வரவேற்பதாகவும் இதைத் தீர்க்க சுதந்திரக் கட்சி தவறினால் இடதுசாரி முன்னணி தான் இதைத் தீர்க்குமென்பதில் தமக்குச் சந்தேகமில்லையென்றும் திரு. நடேசன் தமது அறிக்கையில் கூறினர்.

—

# சைக்கிள் டயர் உற்பத்தியில் தன்னிறைவு

களுத்துறை. வியாழன்

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த ஹினட்டியங்கல என்னுமிடத்திலுள்ள பைசிக்கிள் டயர் தொழிற்சாலை இந்நாட்டு கைத்தொழில் முன்னேற்றத்தில் ஒரு மகத்தான சாதனையை ஈட்டியுள்ளது. "இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பைசிக்கிள் டயர்கள் இந்நாட்டின் தேவையைப் பூரணப்படுத்துவனாய் இருக்கின்றது" என்று களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ பத்திரான 1960-61-ம் ஆண்டிற்குரிய தனது ஆட்சி பரிபாலன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தேவைக்கு மிஞ்சிய டயர்களை பிற நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் இக் கைத்தொழில் தயாரிப்புக்களை ஆதரிக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டு வருவதாக மேலும் அந்த அறிக்கை கூறுகின்றது.

—

# அமெரிக்க தகவல்பகுதி அன்பளிப்பு

சுன்னாகம், வியாழன்

கந்தரோடை சனசமூகநிலயத்திற்கு யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க தகவல் பகுதியினர் ஏராளமான புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

# காங்கேசன்துறையில் விரிவான விளையாட்டுப் போட்டி

## அடுத்த மாதம் நடைபெற ஏற்பாடு

காங்கேசன் துறை, புதன்

காங்கேசன் துறையில் நீச்சல் போட்டி, மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி, சைக்கிள் போட்டி, தாச்சி, உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், பாட்மிண்டன் விளையாட்டுப் போட்டிகளும் அடுத்த மாதம் விரிவான முறையில் நடத்தப்படவிருக்கின்றன.

காங்கேசன் துறை பட்டின சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. சுகாதாரவார விழாவை முன்னிட்டே இத்தகைய போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன. அடுத்தமாதம் 10-ந் திகதி ஆரம்பமாகி ஒருவார காலத்திற்கு இச்சுகாதார விழா கொண்டாடப்படவிருக்கிறது. சுகாதாரவிழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நேற்று மாலை பட்டினசபை மண்டபத்தில் திரு மு. திடவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள், சனசமூகநிலையப் பிரதிநிதிகள், விளையாட்டுக்கழகம் மற்றும் பொது நிலையங்களின் பிரதிநிதிகளும், பொலிஸ், வைத்திய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சுகாதாரவிழாவையொட்டிப் பட்டினசபை எல்லையிலுள்ள பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்துவதெனவும், விளையாட்டுக்கழகங்களுக்கிடையே தாச்சி, பாட்மின்டன், கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டப் போட்டிகள் நடத்துவதெனவும், பட்டின சபை எல்லைக்குட்பட்டவர்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. நீச்சல் போட்டியும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியும் நடத்தப்படவிருக்கின்றன. மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் கலந்துகொள்ள அனுமதிப்பதெனவும் தீர்மானிககப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கான பரிசுகள் அடுத்தமாதம் 16-ந் திகதி நடைபெறும் சுகாதாரவாரப் பொதுக்கூட்டத்தில் வழங்கப்படவிருக்கிறது;

---

# வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 17-5-63

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 நாகபூஷணி இரத்தினம் — பக்திப்பாடல்கள், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 ஞானாஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 இரா. சிவ அன்பு — கதாப்பிரசங்கம், 10-15 தேர்ந்தஇசை.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 இசைக்கோவை — நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 குரல் இசை, 1-50 வாத்தியஇசை, 2-10 வேப்பத்தூர் வி. ஜகதீசன் — பாட்டு.

மாலை 5-15 வேப்பத்தூர் வி. ஜகதீசன் — பாட்டு, 5-45 காந்தி அஞ்சலி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பொங்கியெழும் பாரதம் — சித்திரம், 7-45 பரூர் சுந்தரமய்யர், எம். எஸ். கோபாலகிருஷ்ணன் — வயலின், 9-15 பலகணி, 9-30 மெல்லிசை, 9-45 இசை மாலை.

---

## மத்தியஸ்த . . .

(3-ம் பக்க தொடர்ச்சி)

கிறதென்றும் கூறினர்.

புதுடில்லியில் பாரதப் பிரதமர் நேரு, நேற்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

"காஷ்மீர் பிரச்னை பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கடந்த 15 வருடங்களாக இருந்து வருகிறது. இந்தப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க பாரதம் தன்னாலான முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிறது. இனிமேலும் மேற்கொள்ளும் சுமுகமான முறையில் காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வு காணவிரும்பும் பாரதம் காஷ்மீர் பிரச்னை குறித்து பாகிஸ்தானுடன் பேச்சுக்கள் நடத்த ஒரு பொழுதும் தயங்கியதில்லை.

காஷ்மீர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு, ஒரு மத்தியஸ்தரின் அல்லது மத்தியஸ்த குழுவின் உதவி தேவையென்று வெளியான யோசனையை முன்னர் நாம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருந்தோம். ஆனால் இப்பொழுது இந்த யோசனையை பாரதம் முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

காஷ்மீர் பிரச்னை குறித்து பேச்சுக்கள் நடத்தும் பொருட்டு பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானை நேரில் காண்பதற்கு நான் தயாராக விருக்கின்றேன். பாகிஸ்தானும் பாரதமும் ஒற்றுமையாக, சமாதானமாக வாழ்வதற்கான முயற்சிகளை கையாளும் பொருட்டு பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்த நான் ஆயத்தமாக விருக்கிறேன்.

### இறுதித் தீர்வு

மத்தியஸ்த யோசனைகளுக்கு பாரதம் இணங்கிக்கொண்ட போதிலும் காஷ்மீர் பிரச்னை சம்பந்தமான இறுதித்தீர்வு காண்பதை இரண்டு நாடுகளிடம் ஒப்படைக்க வேண்டும். இரண்டு நாடுகளும் ஒரு முடிவுக்கு வருவதையே நாம் என்றும் விரும்புகின்றோம்."

### சீனாபற்றி நேரு

சீனத் தகராறு குறித்து பாரதப் பிரதமர். நேரு தெரிவிக்கையில், பாரதத்துக்கும் சீனாவுக்குமிடையேயான எல்லைத்தகராறைத் தீர்த்துக் கொள்ள பாரதம் பல வழிகளையும் கையாண்ட போதிலும் எந்த யோசனைகளையும் ஏற்றுக்கொள்ள சீனா விரும்புகிறதில்லை யென்றும் கொழும்பு யோசனைகளை சீனா கொள்கையளவில் மட்டும் ஏற்றுக் கொள்ளாமல், முற்றாக அதை ஏற்கவேண்டும் என்றும், கொழும்பு யோசனைகளை முற்றாக ஏற்றுக் கொண்ட பின்னர்தான், பாரத-சீன பேச்சுக்கள் நடைபெற வாய்ப்பு ஏற்படும் என்றும் கூறினர்.

---

# ரெக்கட் கோஷ்டி வெற்றி

சுன்னாகம், வியாழன்

கந்தரோடை சனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் டாக்டர் சுப்பிரமணியம் வெற்றிக்கிண்ணத்திற்கான கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சுன்னாகம் ரெக்கட் கோஷ்டியும் தையிட்டி ஸ்டார் கோஷ்டியும் கலந்து கொண்டன.

ஆட்டம் ஆரம்பமுதல் விறு விறுப்பாகவே இருந்து. ரெக்கட் கோஷ்டி 2-1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. திரு. இ. நாகலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

---

# சமாச விழா போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

வலி-கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாச உப விழாப் போட்டி புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி மைதானத்தில் சனியும் ஞாயிறும் நடைபெறவிருக்கிறது. சனிக்கிழமை காலை கல்லூரி அதிபர் திரு. சு. கந்தசாமி தலைமையில் இயல் இசை நாடக அரங்கம் நடைபெறவிருக்கிறது. ஞாயிற்றுக் கிழமை விளையாட்டுப்போட்டியும் நடத்தப்படவிருக்கிறது.

# விண்ணினைக் கிழித்து . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை விமானம் செலுத்த மைந்தன் பார்த்துக் கொண்டிருப்பதா என்று எண்ணிய அவர், தனது ஆவலைத் தெரிவித்து தந்தையின் மடியிலிருந்தவாறே விமானத்தைச் செலுத்தினர். விமானத்தில் பறப்பதில் ஆசை கொண்ட கூப்பர் தனது 16-வது வயதில் தனிமையாக விமானத்தைச் செலுத்தினர். இளமைப் பருவத்திலேயே துணிவும் ஆர்வமும் கொண்ட கூப்பர், இன்று விண் வெளிப்பயணத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதில் விந்தையெதுவுமில்லை யென்றுதான் கூறலாம்!

### உலகை படம்பிடித்தார்

தம்முடன் கூடவே காமிராக்களைக்கொண்டுசென்றிருக்கும் மேஜர் கூப்பர் உலகை வலம் வரும் சமயம் உலகினையே படம்பிடித்தார். ஏராளமான நகரங்களையும் எண்ணிலடங்கா பல அற்புதக்காட்சிகளையும் தாம் கண்டதாக கூப்பர் அறிவித்துள்ளார். ஏழு தடவைகள் உலகைக் கடந்துவிட்ட மேஜர் கூப்பர் பதினேழாவது தடவை உலகை வலம் வந்த பின்னர் தான் மேற்கொண்ட பயணத்தைத் தொடருவார் என்றும், அசம்பாவிதம் எதுவுதும் ஏற்பட்டால் பதினேழாவது தடவையில் பூமிக்கு இறக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்படுறது. இருந்த போதிலும், மேஜர் கூப்பர் தனது 22 தடவை உலக வலத்தை வெற்றிகரமாகவே செய்து முடிப்பார் என்று வான்வெளி அவதான நிலையம் அறிவிக்கிறது. திட்டமிடப்பட்டபடி கூப்பர் தனது உலக வலத்தை முடித்தால், அவர் பசுபிக்சமுத்திரத்தில் இறக்கப்படுவார் என்றும் ஆனல் திட்டமிட்டபடி தனது பயணத்தை முடிககாவிட்டால் அத்திலாந்திக் சமுத்திரத்தில் இறககப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வான்வெளிப் பயணத்தின் போது எட்டு மணி நேரம் நித்திரை செய்வார். பல விஞ்ஞான ஆராய்ச்சிகளை நடத்துவார். மேஜர் கூப்பர் 22 தடவைகளும் உலகினை வலம் வந்து சுகத்துடன் பூமிக்குத் திரும்பவேண்டும் என அமெரிக்க மக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.




கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/118

# சிட்னியை அகற்றும் முயற்சியை தடுக்கவும்
## சுப்ரீம்கோர்ட்டுக்கு விண்ணப்பம்

கொழும்பு, புதன்

திரு. சிட்னி டி, சொய்சாவை அவர் தங்கியிருக்கும் ஆஸ்பத்திரி அறையிலிருந்து சட்டவிரோதமாகவும், பலாத்காரமாகவும் அகற்றும் முயற்சியை கைவிடும்படி சொய்சாவின் வழக்கறிஞர்கள் சுப்ரீம் கோர்ட் பதிவாளருக்கு விண்ணப்பம் செய்துள்ளனர்.

டாக்டர்களின் ஆலோசனை இல்லாமல் இவ்விதம் செய்யக் கூடாது என பிஸ்காலுக்கு உத்தரவிடும்படி வழக்கறிஞர்கள் பதிவாளரைக் கேட்டுள்ளனர். திரு. சொய்சாவை ஆஸ்பத்திரி அறையிலிருந்து நீக்கினல் அவரது தேகசுகம் கெட்டுவிடும் என டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்,

# பிரதம மந்திரியுடன் ஏ. பி. பெரேரா பேச்சு
## நிதி மந்திரி பதவியை ஏற்பாரென ஊஷ்யம்

கொழும்பு, வியாழன்

ஐக்கிய அராபியக் குடியரசிலுள்ள இலங்கைத் தூதர் திரு. ஏ. பி. பெரேரா நேற்று பிரதம மந்திரியை அவரது உத்தியோக வாசஸ்தலத்தில் சந்தித்து சுமார் 3 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். நிதிமந்திரி பதவி அவருக்குக்கிடைக்க விருப்பதாயும், இதுசம்பந்தமான விஷயம் பேச்சுவார்த்தையில் முக்கிய இடம் பெற்றதெனவும் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

திரு பெரேரா நிதிமந்திரியாக்கப்பட்டால், சில நடைமுறை சிக்கல்கள் எழக்கூடுமென்றும், பார்லிமெண்டில் அவர் பிரமாணம் எடுத்துக் கொள்ளவேண்டியிருப்பதால், சபை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் அது சாத்தியமாயிருக்காதென்றும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. இந்த சிக்கலை எப்படித் தவிர்ப்பது என ஆராயப்பட்டதாயும் இதே வட்டாரங்கள் கூறுகின்றன. திரு. பெரேரா நிதி மந்திரியாக்கப் பட்டால், தற்போதைய நிதிமந்திரி திரு. கலுகல்லே, மீண்டும் மராமத்து மந்திரியாகவே இருப்பார் எனத் தெரிகிறது.

# சுபசிங்கா இம்மாதம் இலங்கை வருவார்
## குருஷ்சேவை சந்தித்தார்

கொழும்பு, புதன்

ரஷ்யாவில் உள்ள இலங்கைத் தூதர் திரு. ரி. பி சுபசிங்கா இம்மாத இறுதிக்குள் இலங்கை வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இடதுசாரிகள் ஐக்கிய முன்னணியின் தலைமைப் பீடத்துடன் மிகமுக்கியமான தொடர்பு சம்பந்தமாகவே அவர் வருவதாகக கருதப்படுகிறது.

திரு. ரி. பி. சுபசிங்காவின் வேண்டுகோளின் பேரில் ரஷ்யப் பிரதமர் திரு. குருஷ்சேவ் அவருடன் கலந்துரையாடினர் என கொழும்பில் வெளியிடப்பட்ட டாஸ் அறிவிப்புக் கூறுகிறது. ரஷ்யப் பிரதமரும் திரு. சுபசிங்காவும் இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயுள்ள உறவு பற்றியும் சினேகபூர்வமான பேச்சுவார்த்தை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

## தபால்அட்டை 5 சதமாகும்?

கொழும்பு, புதன்

உள்நாட்டு தபால் அட்டையின் விலை 3 சதத்திலிருந்து 5 சதத்துக்கு உயர்த்தப்படுமென்றும், போஸ்டல்ஆர்டர், மணிஆர்டர் கமிஷன்கள் அதிகரிக்கப்படலாம் என்றும் தெரிகிறது.

## அதிசயம் ஆனல் உண்மை?

கொழும்பு, வியாழன்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன (ஸி. டபிள்யூ ஈ.) த்துக்கான காஷியர்களின் நேர்முகப் பரீட்சை, இன்று காலை 10 மணிக்கு கொழும்பில் நடைபெறுவதாயும்,ஆனல் இதற்கு ஆஜராகுமாறு யாழ்ப்பாணம் உட்பட மற்றும் சில இடங்களிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேற்றிரவு 7-30 மணிக்குத்தான் கொழும்பிலிருந்து தந்தி அனுப்பப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

## இணுவில் பிள்ளையார் உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

இணுவில் ஸ்ரீ பரராசேகரப் பிள்ளையார் கோவில் உற்சவம் 17-5-63 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன ஆரம்பமாகின்றது. கொடியேற்றத்திற்கு முன் தினம் திரு. ப. கமலநாதன், திருமதி அப்பாக்குட்டி தங்கம்மா ஆகியோர் உபந்நியாசம் செய்வார்கள். 26-5-63ல் தேர்த் திருவிழாவும், 27-5-63ல் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## ஆயுள்வேத சபை தேர்தல் முடிவு

கொழும்பு, புதன்

ஆயுள்வேதக் கல்லூரி, ஆஸ்பத்திரி சபைக்கான தேர்தலில் திரு. பி. எல். டபிள்யு சிறிசேனவும், திரு. வில்லியம்ஸ் பெர்ணன்டோவும் வெற்றி பெற்றுள்ளார்கள்.

திரு. சிறிசேனவும், திரு. பெர்ணன்டோவும் மேற்கூறப்பட்ட சபைக்கு தெரிவுசெய்யப் பட்டுள்ளார்கள். முனசிங்கா தனது கட்டுப்பணத்தை இழந்தார்.

தபால் மூலம் நடைபெற்ற வாக்கெடுப்பின் விபரம் வருமாறு:- திரு. டயிள்யு. சிறிசேன:- 814; திரு. வில்லியம்ஸ் பெர்ணன்டோ:- 712; திரு. டி. எல். ஏ. முனசிங்கா.- 156.

லண்டன், மே 15

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள பெண்களின் வீட்டு வாழ்க்கை எவ்விதம் நடைபெறுகிறதென்பதைச் சித்தரிக்கும் கண்காட்சி ஒன்று இன்று லண்டனில் ஆரம்பமாயிற்று.

## 353 கைதிகள் விடுதலை

புதுடில்லி, மே 15

இன்று காலை 353 இந்திய போர்க்கைதிகளை, சீன விடுதலை செய்தது.

## தமிழ் நாட்டில் பெண் வழக்கறிஞர் சங்கம்

சென்னை, மே 15

பெண் வழக்கறிஞர்கள் சங்க தமிழ்நாட்டுக் கிளை ஒன்றை நிறுவுவதென, உபசபாநாயகர் ஸ்ரீமதி வயலட் ஆல்வா தலைமையில் நடைபெற்ற வழக்கறிஞர் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. இக்கூட்டத்தில் சென்னையிலுள்ள 40 பெண் வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். இந்திய பெண் வழக்கறிஞர்களின் மகாநாட்டை சென்னையில் நடத்தவேண்டுமெனவும் கோரப்பட்டது.

## அமெரிக்கதூதர் இலங்கை திரும்புகிருர்

கொழும்பு, புதன்

அமெரிக்க தூதர் செல்வி. பிரான்சிஸ் வில்லிஸ் இலங்கை திரும்புகிருர். இவர் இருமாதகால லீவில் தாயகம் சென்றிருந்தார்.

## கொழும்பில் ஏ. பி. பெரேரா

கொழும்பு, புதன்

ஐக்கிய அராபியக் குடியரசிலுள்ள இலங்கைத் தூதர் திரு. ஏ. பி. பெரேரா கொழும்பு வந்துள்ளார். பீகிங் சென்றிருந்த அவர், சீனப் பிரதமரிடமிருந்து இலங்கைப் பிரதமருக்கு ஒரு கடிதம் கொண்டுவந்திருப்பதாகத் தெரிகிறது.

## கடற்படை உத்தியோகஸ்தர்களின் சலுகை வாபஸ்

கொழும்பு, புதன்

வெளிநாட்டு குடிவகைகள், சிகரெட்டுக்கள், சுருட்டுக்கள் முதலியவற்றை சுங்கக் கட்டணம் செலுத்தாமல் பெறக்கூடிய வகையில் கடற்படை உத்தியோகஸ்தர்களுக்கு இதுவரை இருந்த சலுகையை அரசாங்கம் வாபஸ் செய்துள்ளது. இனிமேல் கடற்படை உத்தியோகஸ்தர்கள் இவ்வித பொருள்களுக்கு கட்டணம் செலுத்த வேண்டும்.

சுங்கக் கட்டணம் செலுத்தாமல் பெறக்கூடிய பொருள்களை கடற்படை உத்தியோகஸ்தர்கள் கடத்தியதுபற்றி விசாரணை நடத்திய கமிஷனின் அறிக்கையைத் தொடர்ந்தே இவ்விதம் கடற்படை உத்தியோகஸ்தர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகை வாபஸ் பெறப்பட்டுள்ளது. சலுகையை வாபஸ் பெறுவதென்ற முடிவை உடனடியாக அமுல் நடத்தும்படி கடற்படைத் தளபதியிடம் கேட்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத குடியேற்ற முயற்சி
### பலருக்கு தண்டனை

சென்னை, மே. 15

இலங்கைக்கு கள்ளத்தனமாகக் குடியேற முயன்றவர்களைத் தடுக்கும் முயற்சிகள் கடந்த பெப்ரவரி மாதம் 13 முறை நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. 15 ஏஜெண்டுகளும், குடியேற முயன்ற இருவரும் கைதுசெய்யப்பட்டனர். இதே காலத்தில் இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட 74 சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் தனுஷ்கோடி வந்தனர். ஒரு படகு கைப்பற்றப்பட்டது. பெப்ரவரி மாதம் 28 ஏஜண்டுகளுக்கும், 8 பேர் குடியேற முயன்றவர்களுக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

## வடிசாராயம் வைத்திருந்தார் ரூ. 100 அபராதம்

மாவிட்டபுரம், புதன்

உரும்பிராயைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை சின்னப்பு என்பவர் 160 டிறும் வடிசாராயத்தைச் சட்டவிரோதமாக வைத்திருந்ததாக சுன்னுகம் பொலிசாரால் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெ‌ள்ளி. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது, எதிரிதான் குற்றவாளி என்றுர். நீதிபதி அதை ஏற்று 100 ரூபா அபராதம் செலுத்த உத்தரவிட்டார்.

## டி. டி. கே.

ஒட்டாவா, மே 15

கனடா சென்றிருந்த இந்திய மத்திய மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, இன்று வாஷிங்டன் புறப்பட்டார்.


வெற்றிகரமான 3-வது வாரம்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (காலி)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையேய ஒரு போராட்டம்

★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை!



சிவாஜி கணேசன்
S. S. ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா
எம். வி. ராஜம்மா
பி. எஸ். வீரப்பா
புஷ்பலதா

நடித்த

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

ஆலய மணி

டைரக்ஷ கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

மனேகரா (யாழ்ப்பாணம்)

என். டி. ராமராவ் லக்ஷ்மி ராஜயம் நடித்த

வேலைக்காரி மகள்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவிலடி மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மே மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.